# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,876 — 1969 ඔක්තෝබර් 17 වැනි සිකුරාදා — 1969.10.17

14,876 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 1083 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் — .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | |


### பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள், அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால், அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கெனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எ. டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சுத்தலைவர்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறனடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்ச வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## உள்ளூராட்சி அமைச்சின் நீர்வளங்கள் வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதி

9[9]

உள்ளூராட்சி அமைச்சின் நீர்வ்ளங்கல், வடிகலாமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் (சிவில்) பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிடுட் படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500 கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில், அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் .. 1969.10.31

(ஆ) தவளிநாட்டு விண்ணப்பங்கள் .. 1969.11.7

குறிப்பு (1) அச்சிட்““ விண்ணப்பப் படிவத்தை அஞ்சல்மூலம் அனுப்பி குறையாததும் முத்திரை இடப்படாததுமான ஓர் கடித உறையில் தமது சொந்த முகவரியை எழுதிக் கடிதத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பபிக்கும் அபேட்சகர் அரசாங்கசேவையில் உள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

(3) வெளிநாட்டில் உள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவம்ங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும் பினால் படிவங்களை விதிக்கப்பட்ட காலஎல்லைக்குள் அரவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்குக் கிட்டவுள் இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத் திற்கு இலங்கை அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலா ளருக்கு அனுப்பபும்பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(4) மருத்துவப் பரிசோதனையும் பயணச்செலவும்: இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அலுவலார்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாவென்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகை மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ்செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட அலுவலாளரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

(அ) பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பளம் உடையதுமாகும். விதவையர் அனாதையர் உபகாரச்சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்தல் வேண்டும்.

(ஆ) நியமனம் மூன்றுவருடகாலத் திறமைகாண் நிலையுடையது.

(இ) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க உத்தியோகத்தராக இருந்தால், ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு அவருடைய நியமனம் பதில்தகமையுடையதாயிருக்கும்.

(ஈ) உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரச் செயலாளரினால் நிர்ணயிக்கப் படும் தொகையாகிய பிணைப்பணத்தைத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் கட்டுமாறு கோரப்படுவர்.

3. சம்பளமும் வாழ்க்கைப்படியும் : இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : —

(அ) ஆண்டொன்றுக்கு ரூபா 5,160 - முதல ரூபா 6,240 - வரை ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 3 உம், ரூபா 6,960 முதல் ரூபா 13200, - வரை ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 34 உம், ரூபா 480 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 0 உம், ரூபா 11,280 இல் ஈராண்டுத் தரிப்பும் ரூபா 6,960க்கு முன்னும் ரூபா 11,280 க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடையும் கணிக்கப்படும்.

இலண்டன் சிவில் பொறியியலாளர் நிறுவனத்தின் கூட்டு உறுப்பின ராகத் தெரிவு செய்யப்படும் பொழுது, அவர் ஆண்டு ரூபா 7,320 என்ற சம்பள நிலையிற் கணிக்கப்படுவர்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் இலண்டன் சிவில் பொறியிய லாளர் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினராக இருந்தால், அவர் ஆண்டு ரூபா 7,320 - என்ற தொடக்கச் சம்பள நிலையிற் கணிக்கப் படுவர்.

(இ) (1) தெரிவு செய்யப்பட்ட பொறியியலாளர் (சிவில்) முழுஉய தொழிற்தகைமயில்லாமல் (ஏ. எம். ஐ. சி. ஈ.) ஆண்டு ரூபா 10, 800 - க்கு மேல் கணிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்

(2) ஆண்டு ரூபா 6,960 - என்ற சம்பள விகிதத்திற்கு முன் வினைத் திறமைகாண் தடையைக் கடப்பதற்கு, அவர் திணைக் கள நடைமுறை கணக்கு முதலியவற்றில் விதித்த பரீட்சை யில் சித்தியெய்தல் வேண்டும். சித்தியெய்தத் தவறியவர் களின் சம்பள ஏற்றம் பின்போடப்படும்.

குறிப்பு முழு உயர்தொழில் தகைமையுடன் சேவையிற் சேரும் பொறியி யலாளர்கள் நியமன நாளிலிருந்து இருவருட காலத்திற்குள் இப்பரீட்சையிற் சித்தியெய்தல் வேண்டும்.

4. வேண்டிய தகைமைகள் : ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப் பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று : அவர்,

(அ) சிறந்த நற்குணம் உடையவராயும் உடல் நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 31.10.1969 ஆம் தேதியில் 21 வயதிற்குட்படாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் (அரசாங்க சேவை யிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது );

(இ) இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலாளர் பாடங் களில் பொறியியலாளர் பட்டம் அல்லது அதற்குச் சமமான மதிப்புள்ள பட்டம் உடையவராக அல்லது (இலண்டன்) சிவில் பொறியியலாளர் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினர் பரீட்சையின் பகுதி ஒன்றிலும், இரண்டிலும் சித்தியெய்தியவராக அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தியவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : 1961 ஆம் ஆண்டு கட்டாய அரசாங்கசேவை அதிகாரச் சட்ட இலக்கம் 70 இன் கீழ் பொறியியலாளர் பதவிக்கு நியமிக்கப் பட்டபொறியியலாளர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லனி எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு– சமயதீட்சைச் சான்றி தழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமா ணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்க மாட்டாது);

(இ) பல்கலைக்கழகப் பட்டம், அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத் தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதி களையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிகுகத்தவறும் அபேட்சகர்களின் விண் ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்ப கடைசித் திகதியன்று அல்லது அவதற்குமுன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங் கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ள ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர் புகளையும் செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு என முகவரியிட்ட னுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக் காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கும் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலா பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட் டையை (அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ள) அதன் பிரகாரம் அறிவு தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்ற மைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட் சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது, இத்தேவைக்கு அமைய ஒழுங்கியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியில் இருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவித் தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலா ளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழுவின்
காலிமுகச் செயலகம்,
அ. பெ. இல. 500.
கொழும்பு–1.
9.10.10969

10—669

---

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**பிரித்தானிய மன்றப் புலமைப் பரிசில்கள் 1970–71 ஆம் ஆண்டு**

ஐக்கிய இராச்சியத்தில் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் படித்தற்குப் பிரித்தானிய மன்றம் வழங்கும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெகுமதிகள் பின்வரும் கற்கைத் துறைகளிலாகும் :—

(அ) ஆங்கிலத்தைப் பிற மொழியாகக் கற்பித்தலில் 2 புலமைப் பரிசில்கள் ;

(ஆ) எந்திரவியலில் மேற்படிப்புக்கான 1 புலமைப் பரிசில்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடிய வரெனக் கரு தப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

2. கால எல்லை:— புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 10 மாத அள வினவாகும், இன்னும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல் லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளின் சித்தியடை யத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஐக்கிய இராச்சிய அதிகாரிகளின் தற்றுணிபுக் கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் புலமைப் பரிசு பெற்றவர் தமது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத் திறன் :— அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் :—

(I) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(II) 1.10.70 அன்று 11 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட வயதி னராய் இருக்க வேண்டும். (பெற்றுள்ள அனுபவம், அல்லது வகிக்கும் நிலைமை காரணமாக அபேட்சகர்கள் எவரேனும்

விசேட தகுதியுடையவராய் இருப்பின் ஆங்கிலத்தைக் கற்பித்தல் சம்பந்தமான புலமைப் பரிசில் இருப்பின் ஆங்கிலத்தைக் கற்பித்தல் சம்பந்தமான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் மாத்திரம் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை 45 வயதாக உயர்த்தப்படக் கூடும்).

(iii) ஆங்கிலத்தில் (எழுதுவதிலும் பேசுவதிலும்) உயர்தர தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) (அ) ஆங்கிலம் கற்பித்தற்கு விண்ணப்பிப்பவராயின் :— மேலுள்ள (1) (II) ஆம், (111) ஆம் உப பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் பெற்றிருப்பதுடன் பின்வரும் வகுதிகளில் எதிலேனும் ஒன்றில் அடங்க வேண்டும்.

(1) க. பொ. த. (உயர்தர) பத்திர பரீட்சையில் அல்லது இலண்டன் இலங்கை இடைமாணிக் கலைப் பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி எய்தியவரும் 1. 10.170 அளவில் பரிசோதகர் சேவையில் அல்லது கற்பித்தற் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றுள்ளவர்களுமான பிரதம வித்தியாதிகாரிகள், கல்வி ஆலோசனையாளர்கள் அல்லது வட்டார வித்தியாதிகாரிகள் ;

அல்லது

(2) (அ) விசேட ஆங்கில பயிற்சி அல்லது உயர்தர (பொது நெறிகள்) பயிற்சி பெற்ற ஆசிரியராக அல்லது (ஆ) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் அல்லது இலண்டன் இலங்கை இடைமாணிக் கலைப் பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியெய்திய பட்டதாரிகளுமாக இருப்பதுடன் ஆங்கிலம் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுமான ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் அல்லது பயிற்சி ஆசிரியர்கள் ஆசிரியைகள் இவர்கள், மேலும் 1.10.70 அளவில் குறைந்தபட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்,.

(ஆ) எந்திரவியலுக்கு விண்ணப்பிப்பவராயின :— மேலுள்ள (1) ம், (11) ஆம், (111) ஆம் உபபந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பெற்றிருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் 1 ஆம் அல்லது உயர்தர 2 ஆம் வகுப்பு எந்திரவியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு —விதிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்தின் கீழ், அல்லது ஒரு சபையில் கூட்டுத்தாபனத்தில், பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையத்தில் சேவைபுரிவதாக ஒரு முறி அல்லது உடன்படிக்கை செய்துள்ள ஓர் அபேட்சகர் 1.10.70 அளவில் முறியில், அல்லது உடன்படிக்கையில் விதிக்கப்பட்டுள்ள கால சேவையைப் பூர்த்தி செய்து முறியில் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை முற்றாக நிறைவேற்றியிருந்தாலன்றி விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நாங்கள் உடையனவாய் இருக்கும்.

(அ) ஐக்கிய இராச்சியத்துக்குப் போய்வர, பயணச் செலவு ;

(ஆ) சொந்த தாபரிப்புச் சகாயப்படி ;

(இ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்கும் வருடாந்தம் £25 கொடை ;

(ஈ) கற்கைக் கட்டணம் ;

(உ) ஐக்கிய இராச்சியத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரயாணத்துக்கான செலவு.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை :—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சைத் தொடர்பில் பிரயாணச் செலவேணம் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரஙகள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. உடன்படிக்கை :—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லுமுன் பினவரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்றஅரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆகியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்,

7. வைத்திய பரீட்சை :—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராச்சியத்தில கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மானலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வயூட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தறறுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அலிப்பாகுமெனக் கருதப்படலாகாதென் விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறறபாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 – பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 – பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப் பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கெனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிதனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப் படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர் தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சு,
மலாய வீதி, கொழும்பு 2,
1969 ஆம் ௵ 10 ஆம் ௴ 9 ஆந் திகதி

10-674—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

### கமத்தொழிற்றிணைக்களம்

### வேலைகள் பரிசோதகர் பதவிகள்

கமத்தொழிற்றிணைக்களத்தின் பொறியியற் பிரிவுக்குத் தேவையான வேலைகள் பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. சம்பளம்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்—ஆண்டொன்றுக்கு ரூபா 1,860—120—ரூபா 3,780 (ஆண்டுக்கு 2,820 ரூபாவுக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு), ரூபா 3,900—180—ரூபா 5,340.

3. ஒப்பந்த நியதிகள்.—(1) இப்பதவி நிலையானதும் உபகாரச் சம்பளமுடையது மாகும். இந்நியமனம் மூன்றுண்டுக் காலத்துக்கு தகுதிகாண் நிலையினதாகும்.

(2) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்தீவின் எப்பாகத்திலும் சேவை செய்ய வேண்டியவராவர். அவர் இத்திணைக்களத் தலைவரினல் தீர்மானிக்கப்படும் முறையிலே சொல்லப்படும் தொகையான பிணையைக் கட்டுதலும் வேண்டியதாகலாம்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனபற்றி சான்று அளித்தல் வேண்டும்—

(அ) 1.11.69 ல் 25 வயதுக்குக் கீழ்ப்படாமையும் 35 வயதுக்கு மேற்படாமையும் ;

(ஆ) உச்ச ஒழுக்கப்பண்பும் உடலுறுதியும் ;

(இ) குடியியல் எந்திரவியல் தொழில் பயிலுவோராக 5 ஆண்டுகளைக் கழித்து பின்னிணைப்பு 4 (அ) இல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுமிதற்கான அ.க. பகுதியின் திணைக்களத் தகுதியாக்கும் பரீட்சையிற் சித்தியடைந்தமையும்

அல்லது

(2) படம் வரை அறிஞராக அல்லது ஓவசியராக இருந்து 5 ஆண்டுகட்கு மேற்பட்ட செய்முறைக்குரிய அனுபவத்துடன் பின்னிணைப்பு 4 (அ) இல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அ.க. பகுதியின் திணைக்களத் தகுதியாக்கும் பரீட்சையிற் சித்தியடைந்தமையும் ;

அல்லது

(3) தொழினுட்ப கல்லூரியொன்றிலே குறைந்தபட்சம் 4 ஆண்டு காலத்துக்குரிய குடியியல் எந்நிரவியற் பதிற்சி நெறியை வெற்றியாக முடித்துக்கொண்டமையும் ;

அல்லது

(4) நிலஅளவை, மட்டம் பார்த்தல் ஆகியவற்றில் நில அளவையாளர் தலைமை அதிபதியிடம் உத்தரவுச் சீட்டுப்பெற்று நீர்வழங்கல், அமைப்பு வேலை ஆகிய கட்டுவேலையில் ஈராண்டு அனுபவமுள்ளமையும் ;

அல்லது

(5) குடியியல் அல்லது இயந்திரத்தொழிற்பொறியியல் தொழில் பயிலுங்காலத்தையும் செய்முறை அனுபவம் பெறுதலையும் மொத்தம் 5 ஆண்டுகட்குக் குறையாத காலத்துக்காயினும் முடித்துக்கொண்டு அத்துடன் இருசார்பிலும் பலத்தகட்டுவேலைகளிலும் நிலஅளவையிலும் மட்டம் பார்த்தலிலும் கொள்கை அறிவும் செய்முறை அனுபவமும் உள்ளமையும்.

குறிப்பு.—(மேலே சொல்லப்பட்ட தகைமைகளுள்ள அபேட்சகர்கள் நியமனம் பெற்றுக்கொள்ளமுன்னர் அரசாங்கக் கட்டுவேலைப் பகுதி அதிபதியால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கும் தோற்ற வேண்டியவர்களாகலாம். அத்துடன் நியமனம் பெற்று ஈராண்டுகளுள் பின்னிணைப்பு 4 (அ) ல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அரசாங்க கட்டுவேலைத்திணைக்களப் பரிசோதனையில் சித்தியடைதலும் வேண்டும்) அல்னுது

(6) க.பா.சா. பரீட்சையிலாயினும் சித்திபெற்று தெரு வீதி கட்டட வேலைகளில் அல்லது நீர்வழங்கல்களில் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் செய்முறை அனுபவம் பெற்றமையும் நில அளவையிலும் மட்டம் பார்த்தலிலும் நல்ல அறிவு உள்ளமையும் குறிப்பு.—(மேலே சொல்லப்பட்ட தகைமைகளுள்ள அபேட்சகர்கள் நியமனம் பெற்றுக்கொள்ள முன்னர் அரசாங்க கட்டுவேலைப் பகுதி அதிபதியால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கும் தோற்றவேண்டியவர்களாகலாம். அத்துடன் நியமனம் பெற்று ஈராண்டுகளுள் பின்னிணைப்பு 4 (அ) ல் விதிக்கப்பட்ட பிரகாரம் உபபரிசோதகர் தரத்துக்கு உயர்த்தப்படுதற்கான அரசாங்க கட்டுவேலைத்திணைக்களப்பரிசோதனையில் சித்தியடைதலும் வேண்டும்.)

5. அபேட்சகர் பின்வருவனவற்றின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் அணைத்து அனுப்புதல் வேண்டும்.

(1) பிறப்புச்சான்றிதழ் ;

(2) கல்வித்தகைமைகளுள் உயர்தரச சான்றிதழ் ;

(3) நன்னடத்தைச் சான்றிதழ்களுள் சமீபகாலத்திய மூன்று ;

(4) தொழினுட்பத் தகைமைகள், அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்.

6. இணைக்கப்பட்டுள்ள படிவம் போன்ற ஒன்றிலே விண்ணப்பங்கள் தய்ாரிக்கப்பட்டு பிரதிக் கமத்தொழிற்பணிப்பாளர் (பரிபாலனம்) பேராதனை என்னும் முகவரிக்கு 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் தேதியன்று அல்லது முன்னர் சேர்க்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பிரதிக் கமத்தொழிற்பணிப்பாளரின் (பரிபாலனம்) பெயரை முகவரியில் எழுதலாகாது.

7. இவ்வர்த்தமானியின் 1 ம் பாகத்தின் 2 ம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்கள் பற்றிய பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

எல். பீ. மாறம்பே,
பிரதிக் கமத்தொழிற்பணிப்பாளர் (பரிபாலனம்).

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை,
1969 ஆம் ஞூ மீ 7 ஆந் வ.

#### வேலைகள் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

1. பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. நாட்டினம் : ————.
4. பிறப்புத் தேதியும் வயதும் 1.11.1969 இல் : ————.
5. விண்ணப்பகாரரின் தந்தையின் பிறப்புத் தேதியும் இடமும் : ————.
6. மிகக்கூடிய கல்வித் தகைமைகள் : ————.
7. தொழினுட்பத் தகைமைகள் : ————.
8. அனுபவம் : ————.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி : ————.

10-661—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

---

### கமத்தொழிற்றிணைக்களம்

### வித்து நுண் தொழிலாளர் பதவி

கமத்தொழிற்றிணைக்களத்திலே வித்து நுண் தொழிலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழ் காட்டப்படும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பம் விவசாய பிரதிப் பணிப்பாளர், நிருவாகம், பேராதனை என்னும் முகவரிக்கு 69 ல் அல்லது அத்தேதிக்கு முன்னர் வந்து சேருதல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 750–42–1086

3. நியமன நியதிகள்—இப்பதவி நிரந்தர்மான்தும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும் தெரிவு செய்யப்படும் அபேட்சகர் வி. அ. இ. சம்பளத்து உதவு தொகை வழங்குதல் வேண்டும்.

4. கல்வித்தகைமைகள்.—அபேட்சகர் பின்வருவனபற்றி திருப்தியான சான்று காட்டுல்த வேண்டும்—

(1) (அ) சிறந்த நல்லொழுக்கமும் உடனல்மும் ;

(ஆ) 1.10.69 ஆல் 20 வயதுக்குக் குறையாமையும் 30 வயதுக்கு மேற்படாமையும் (எற்கெனவே அரசினர் சேவையிலுள்ளோர் விடயமாக மேலெல்லை வயது கவனிக்கப்படமாட்டாது)

பணிப்பாளர், நிருவாகம், பேராதனை என்னும் முகவரிக்கு (1) (1) 69 இல் அல்லது அத்தேதிக்கு முன்னர் வந்து சேருதல் வேண்டும்.

2. சம்பள அளவுத்துட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 750–42–1086.

3. நியமன நியதிகள்—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் வி. அ. இ. சம்பளத்து உதவு தொகை வழங்குதல் வேண்டும்.

4. கல்வித்தகைமைகள்.—அபேட்சகர் பின்வருவனபற்றி திருப்தியான திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்—

(1) (அ) சிறந்த நல்லொழுக்கமும் உடனலமும்.

(ஆ) 1.10.69 இல் 20 வயதுக்குக் குறையாமையும் 30 வயதுக்கு மேற் படாமையும் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளோர் விடயமாக மேலெல்லை வயது கவனிக்கப்படமாட்டாது) ;

(இ) சிங்கள மொழி தமிழ் மொழி, எண்கணிதம் கணிதம் ஆகிய வற்றுடன் மேலும் 4 பாடங்களில் சி. பா. சான்றிதழ் அல்லது க. பொ. த. (சாதாரண) சான்றிதழ் பரீட்சையில் சித்தி. இவற்றுள் 5 பாடங்களில் ஒரு அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கமச்சாதன பாடசாலைச் சான்றிதழும். அல்லது

(2) குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்காயினும் வித்துக்கள் இனமாகப் பிரித்தலில் அனுபவமுள்ள, நிலையான பதவியிலுள்ள இத் திணைக்கள வேலையாளர் எவரும்.

5. விண்ணப்பகாரர் விண்ணப்பங்களுடன் அனுப்பவேண்டிய பிரதி கள் (மூல ஓலைகள் அல்ல)—

(அ) மிக உயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ் ;
(ஆ) கமச்சாதன பாடசாலைச் சான்றிதழ் ;
(இ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;
(ஈ) சமீபகாலத்திய குணச்சான்றிதழ்கள் மூன்று.

6. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகை யின் 1 ம் பாகம் 2 ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றையும் பார்க் குக.

7. விதிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படா.

8. விண்ணப்பங்களும் அவற்றுடன் தொடர்பான எச்சாதனங்களும் விவசாயப் பிரதிப் பணிப்பாளர் (திருவாகம்) பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி அவை இத்திணைக்களத்தின் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகாது.

எம். எஸ். பெரேரா,
கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை, 1969 ஆந் ௵ செப்டம்பர் ௴ 7 ஆந் ௳.

விண்ணப்பம் ஆக்கமுறை

கமத்தொழிற்றிணைக்கள வித்து நுண் தொழிலாளர் பதவி

1. முழுப்பெயர் :———.
(அ) குடும்பப்பெயர் :———.
(ஆ) மறுபெயர்கள் :———.
2. விலாசம் :———.
3. பிறந்த தேதி : 1.10.69 இல் வயது :———.
4. இலங்கைப் பிரசா உரிமை பரம்பரையாலா அல்லது பதிவாலா ?
5. உச்ச கல்வித் தகைமைகள் :———.
6. உயர்தொழிற்கல்வித் தகைமை :———.
7. அனுபவம் :———.
8. குணச்சான்றிதழ்கள் அளித்தோரின் பெயர்களும் விலாசங்களும்—

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண் மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்ன ராயில் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நட்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :———.

10—657—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.——.

---

## கமத்தொழிற்றிணைக்களம்

**பண்டசாலைப் பொறுப்பாளர் (கமங்களும் விரிவாக்கச் சேவைகளும்) பதவிகள்**

கமத்தொழிற்றிணைக்களத்திலே பண்டசாலைப் பொறுப்பாளர் (கமங் கள், விரிவாக்கச் சேவைகள், பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. **சம்பளம் :** இப்பதவிக்குரிய சவபள அளவுத்திட்டம்—ஆண்டொன் றுக்கு ரூபா 888—72—ரூபா 2,184—ரூபா 1,608 உக்கு முன் வினைத் திறமைகாண் தடை.

3. **நியமன நியதிகள் :** (1) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப் பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். நியமனம் முதற்கண் 3 ஆண்டுகட்குத் தகுதிகாண் நிலையில் அமையும்.

4. **தேவையான தகைமைகள் :** பின்வருவன பற்றி திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) (1) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் அல்லது

(2) மொழி, எண்கணிதம் கணிதம் உட்பட 6 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படா முறையில் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் சித்திச்சான்றிதழ் உள் ளமை அல்லது

(3) சமமான பரீட்சையிற்சித்தி அத்துடன்
ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது நன்கு மதிக்கப்படும் ஒரு தாபனத்தில் களஞ்சியப்பகுதியில் குறைந்தபட்சம் 3 ஆண்டு அனுபவம் உடைமை. மதிப்பீடு செய்தல், கணித்தல், தேவையான பொருட்களைப் பெற கொள் பொருள் பட்டியல் ஆயத்தஞ்செய்தல், வழமை யான கந்தோர் வேலை ஆகியவற்றில் அனுபவம் மேலதிக தகைமையாகலாம்.

அல்லது

கனிட்ட பாடசாலைச் சான்றிதழுடன் அரசாங்கத் திணைக் களங்களில் தற்காலிக நிலைமையில் பண்டசாலைப் பொறு பாளராக 5 ஆண்டுகளுக்குரிய அனுபவம்.

(ஆ) 1.10.69 இல் 22 வயதுக்குக் குறையாமையும் 35 வயதுக்கு மேற்படாமையும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோர் விடயத்தில் வயது மேலெல்லை கவனிக்கப்படமாட்டாது).

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடனலமும்.

5. விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகள் அணைக்கப் படுதல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரம், அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் ஒழுங்கு விதிக்கோவையின் நோக்கத்திற்காக விநியோகிக்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(2) உயர் கல்விச் சான்றிதழும் மற்றும் தகைமைகள் பற்றிய சான்றிதழ்களும்.

6. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகை யின் 1 ஆம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றையும் பார்க்குக.

7. இதன்கீழ் தரப்படும் மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் ஆயத்தஞ்செய்யப்பட்டு கமத்தொழிற் பணிப்பாளர் ,பேராதனை என்னும் முகவரிக்கு 10.11.69 ல் அல்லது முன்னர் வந்து சேரக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ளோர் உரிய திணைக்களத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கமத்தொழிற் பணிப்பாளரின் சொந்தப் பெயருக்கு விண்ணப்பங்கள் விலாசமிடப் படலாகா. விண்ணப்பப் படிவம் இத்திணைக்களத்தால் வழங்கப்பட மாட்டாது.

எம். எஸ். பெரேரா,
கமத்தொழிற் பணிப்பாளர்.
கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை.

**பண்டசாலைப் பொறுப்பாளர் (கமங்கள், விரிவாக்கச் சேவைகள்) விண்ணப்ப மாதிரிப் படிவம், கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை**

1. முழுப்பெயர் : ———.
2. முழு விலாசம் : ———.
3. வயதும் பிறப்புத் தேதியும் : ———.
4. பிறப்பிடம் : ———.
(அ) விண்ணப்பகாரரின் : ———.
(ஆ) தந்தையின் : ———.
(இ) தந்தைவழிப்பாட்டனின் : ———.
(ஈ) தந்தைவழிப்பூட்டனின் : ———.

குறிப்பு—விண்ணப்பகாரர் இலங்கையிலே பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வும் நிரப்பப்படுதல் வேண்டும். இலங்கையிற் பிறவாதவராயின் (ஆ), (இ) இரண்டும் அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வும் நிரப்பப் படுதல் வேண்டும்.

5. இலங்கைப் பிரசையானல் பரம்பரை வழியாலா அல்லது பதிவு வழியாலா ? : ————.

7. மதிப்பீடு செய்தல், ஆண்டுக்குத் தேவையான பொருள்கள் கணித்தல், பொருள் பட்டியல் தயாரித்து அனுப்பல், அலுவலக வழக்க முறை அனுபவம் : ————.

8. தற்போதைய வேலை : ————.

9. முந்திய வேலை விவரங்கள் : ————.

தேதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

கமத்தொழிற்பணிப்பாளர்,
(திணைக்களத் தலைவரின் சிபார்சு)

தேதி : ————. திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

10–698

---

கமத்தொழிற்றிணைக்களம்

விவசாய பரிசோதனை நடாத்தல் உத்தியோகத்தர் பதவிகள்

விவசாய பரிசோதனை நடாத்தல் உத்தியோகத்தர்கள் வகுப்பு 2, பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்—**

(1) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(2) நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். இத்திணைக்களத்திலே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் நியமனமாக அமையும்.

(3) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத் வில் எப்பகுதியினும் சேவையாற்றல் வேண்டும்.

**3. சம்பளமும் பிற படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்.—வகுப்பு 2, ஆண்டொன்றுக்கு ரூபா 2,820—120—9 அத்துடன் 180—4—ரூபா 4,620. (ஆண்டொன்றுக்கு ரூபா 3,420 உக்கு முன் வி. த.).

**4. கல்வித்தகைமைகள்.**—அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் பின்வருவனபற்றி திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடனலமும்.

(ஆ) நன்கு மதிக்கப்படுமொரு பல்கலைக்கழக விவசாய பட்டதாரி.

(இ) 31.10.1969 இல் 22 வயதுக்குக் குறையாமையும் 35 வயதுக்கு மேற்படாமையும் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்க்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது).

**குறிப்பு.**—இலங்கை பல்கலைக்கழக விவசாய விஞ்ஞானப் பட்டதாரிக்குரி இறுதிப் பரீட்சைக்குத் தோன்றி, முடிபு எதிர்பார்த்திருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்களும் கருத்துக்கொடுத்துக் கொள்ளப்படும். முடிவுகள் வெளியிடப்பட்டு ஒருவாரம் முடியுமுன்னர் அவ்வபேட்சகர்கள் சித்தியை எனக்கு அறிவித்தால் தான் அவ்விதமான விண்ணப்பங்கள் மேலும் கருதப்படும்.

5. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டிய பிரதிகள்—

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் (மு. கு. நானஸ்நானப் பத்திரம், அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) மிக உயர்ந்த கல்வித்தகைமைச் சான்றிதழ்.

(இ) சமீபகாலத்திய குணச்சான்றிதழ் இரண்டு.

**மு.க.**—மேற்போந்த சான்றிதழ்களின் மூலஓலைகள் அனுப்புதலாகாது.

6. இதன்கீழ் காட்டப்படும் படிவம் முறையிலே உள்ள விண்ணப்பம் பதிவுத்தபாலில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (நிருவாகம்), பேராதனை என்னும் முகவரிக்கு 31.10.1969 இல், அல்லது அதற்கு முன்னர் வந்து சேருதல் வேண்டும். அரசினர் சேவையில் உள்ளோரின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத்தலைவர் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவற்றுடன் தொடர்பான எச்சாதனங்களும் பிரதி விவசாயப் பணிப்பாளர் (நிருவாகம்), பேராதனை என்னும் முகவரிக்கனுப்பப்படவேண்டுமேயன்றி எக்காரணத்தையிட்டும் அவை இத் திணைக்களத்தின் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் 1 ஆம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றையும் பார்க்குக.

எம். எஸ். பெரேரா,
கமத்தொழிற் பணிப்பாளர்.

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை,
1969 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 4 ந வ.

விண்ணப்பம் ஆக்கமுறை

கமத்தொழிற்றிணைக்கள விவசாய பரிசோதனை நடாத்தல் உத்தியோகத்தர் வகுப்பு 2, பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ————.
   குடும்பப்பெயர் : ————.
   மறு பெயர்கள் : ————.

2. நிலையான விலாசம் : ————.

3. 31.10.1969 இல் வயது. பிறப்புத் தேதி : ————.
   (பிறப்புப்பதிவுச் சான்றிதழ்ப் பிரதி அணைக்குக)

4. தந்தையின் பெயரும் தொழிலும் : ————.

5. பிறப்பிடம் : ————.
   (அ) தந்தையின் : ————.
   (ஆ) தந்தை வழிப்பாட்டனின் : ————.

6. (அ) நாட்டினம் : ————.
   (ஆ) இலங்கைக்குடியானவரா ?
   (1) பரம்பரைக்குடி : ————.
   (2) பதிவுக்குடி : ————.

7. உச்சக்கல்வித் தகைமைகள் : ————.
   (அ) சிங்களம் : ————.
   (ஆ) தமிழ் : ————.
   (இ) ஆங்கிலம் : ————.

8. பிற விவரங்கள் : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக்காணப்படின் தெரிவு செய்யப்படுத்தற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நட்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி : ————.

10–540—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல. 4,877.

## இலங்கைத் தரைப்படை

## (புதிய போர் வீரர்) படையினர் நியமனம்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையில் புதிய போர் வீரர்களாகச் சேர கீழ்க்காணும் தகைமைகளையுடைய விண்ணப்பகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :று

**2. பொது நிபந்தனைகள் :**

விண்ணப்பகாரர்கள் ஒவ்வொருவரும்—

(அ) பரவபரையான அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும் ;

(ஆ) குறைந்தபட்சம் 5 ஆம் வகுப்பு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (8 ம் வகுப்பு) கனிஷ்ட பாடசாலைத் தராதரம், அல்லது அதற்குக் கூடிய கல்வித்தகைமை உடையோருக்கு விசேட சலுகை வழங்கப்படும் ;

(இ) அரச கரும மொழியில் தேர்ச்சி உண்டு என்பதைத் தெளிவு படுத்தப்படல் வேண்டும் ;

(ஈ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதவராயிருத்தல் வேண்டும். (5 அடி 6 அங்குலத்திற்குக்கூடிய உயரம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;

(உ) 1969 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 7 ம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஊ) தரைப்படைத் தளபதியின் திருப்திற்கேட்ப ஒரு வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

3. 2 ம் பந்தி (ஆ), (ஈ) பிரிவில் கேட்கப்பட்டுள்ள கல்வித் தகைமையும் உடற்றகமையும் ஆகக் குறைந்தனவையே. 2 ம் பந்தியில் கேட்கப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பகாரர்கள் நிரந்தரப் படையில் நியமனம் பெறத்தகுதி அற்றவர்களாவார்கள்.

4. **சேவைக் காலம்.**—ஒரு போர் வீரர் 12 வருடகால சேவையில் பதிவு செய்து கொள்ளப்படுவார்கள். இதில் 5 வருடம் கட்டாய சேவையிலும் 7 வருடம் மாற்றுச் சேவையிலும் சேவை செய்யப்படலாம். பின் விலக்கப்படலாம். குறிப்பிட்ட சில காரணங்களைக் கொண்டு ஒரு போர் வீரர் தமது சேவைக்காலத்தை இன்னும் 12 வருடங்களுக்கு நீட்டிக் கொள்ள அனுமதிக்கப்படுவர். இச்சேவைக்காலம் எல்லாவற்றினதும் மொத்தம் 32 வருடங்களாகும்.

**5. சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படிகளும்.**

(அ) தரைப்படையின் நிரந்தரப்படையினருக்கு 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிய 12,395 ஆம் இலக்கத்தையுடைய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை வேதன சட்டக்கோவை 1961 இன் 1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகும் ;

(ஆ) 1961 ஆம் ஆண்டு தரைப்படை வேதனச்சட்டக் கோவையின் பிரகாரம் படையினர் நிலை தொடக்கம் ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் வகுப்பு 1 உள்ள போர் வீரர்களின் மாதாந்தச் சம்பள விகிதம் பின்வருமாறு :—

| நிலை | மாதம் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| படையினர் .. .. .. | 70 00 |
| லான்ஸ் கோப்ரல் .. .. .. | 85 00 |
| கோரப்ரல் .. .. .. | 115 00 |
| சார்ஜன்ட் .. .. .. | 180 00 |
| ஸ்டாப் — ஸார்ஜன்ட் .. .. .. | 202 00 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் வகுப்பு 11 .. .. | 220 00 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் வகுப்பு 1 .. .. | 250 00 |

(இ) வாழ்க்கைச் செலவுப்படியும், விசேட செலவுப்படியும்.றுவாழ்க்கைச் செலவுப்படியும் விசேட செலவுப்படியும் அரசாங்க விகிதப்படி கீழ்க்காணும் பிரிவைச் சார்ந்த போர்வீரர்களுக்கு வழங்கப்படும் :—

(I) தரைப்படைச் சிலவில் உணவு கொடுக்கப்படாத விவாகமான போர்வீரர்களுக்கு ;

(II) வெளியே வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட விவாகமாகாத போர்வீரர்களுக்கும் ;

(III) விடுதலையில் இருக்கும் போது பாசறையில் உணவு கொள்ளாத விவாகமாகாத போர்வீரர்களுக்கும்.

(ஈ) விவாகமாகாத அல்லது விவாகமான போர்வீரர் தரைப்படைச் சிலவில் உணவு கொள்ளுஎபோது கீழ்க்காணும் வகையினதின் வித்தியாசத்திற்கு மட்டுமே உரித்துடையவராவார்கள் :—

(IV) அரசாங்க விகிதப்படி கொடுக்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படிக்கும் விசேட செலவுப்படிக்கும் உள்ள மொத்தத்திற்கும்;

(II) தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்படும் உணவுச் செலவிற்கும் உள்ள வித்தியாசத் தொகையே வழங்கப்படும்.

(உ) **வீட்டு வாடகை.**—தரைப்படை அல்லது அரசாங்க வீடுகள் வழங்கப்படாத விவாகமான போர்வீரர்களுக்கும், பாசறையில் இடவசதியளிக்கப்படாத விடத்தும் தன் நியமனத்திற்கேற்பவும் விசேட தங்குமிடவசதிகள் வழங்கப்படாத விவாகமாகாத போவீரர்களுக்கும் வீட்டு வாடகை வழங்கப்படும். இவை அரசாங்கத்தினால் பொது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுபவை போலனவாயிருக்கும்.

அரசாங்க அல்லது தரைப்படையினால் வழங்கப்பட்ட வீடுகளில், வாசம் செய்யும் போர்வீரர்களுக்கு வீட்டு வாடகை வழங்கப்படமாட்டாது ;

(ஊ) **சலவைச் செலவு.**—

(I) பாசறையில் வாசம் செய்யும் ஒரு போர்வீரர் தனது படைக்கல ஆடைகளை தரைப்படைச் சிலவில் இலவசமாகச் சலவை செய்து கொள்ள உரித்துடையவராவர் ;

(II) வெளியில் வாசம் செய்யும் போர்வீரர்களுக்கு தரைப்படைத் தளபதியினால் நியமிக்கப்பட்டபடி சலவைச் செலவு வழங்கப்படும்.

(எ) **சேவைக்காலச் சம்பள உயர்வு.**—ஒவ்வொரு நிரந்தரப்படைப் போர்வீரரும் ஒவ்வொரு 5 வயூடகாலச் சேவைக்கும் சேவைக் கால சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூபா 4.50 சதம் வீதம் பெறுவர் ;

(ஏ) **பதவிச் சம்பள உயர்வு.**—கோப்ரல் தொடக்கம் ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் 11 வரையிலான போர்வீரர்கள் தம் நிலையில் ஒவ்வொரு 4 வருடத்துக்கும் பதவிச்சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூபா 7.50 வீதமும், ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் 1 ஆனவர்கள் ஒவ்வொரு 4 வயூட சேவைக்கும் பதவிக்கான சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூபா 15 – வீதமும் பெறத் தகைமையுடையவராவார்கள். கோப்ரல் அல்லது சமமான நிலையினர் நான்கு பதவிச் சம்பள உயர்வுக்கு மட்டுமே உரித்துடையவராவார்கள் ;

(ஐ) **கைம்பெண் அநாதைப் பிள்ளைகளின் உபகாரச் சம்பளநிதி.**—போர்வீரராகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவரும் தன் சம்பளத்தின் 4 வீதமானதைக் கழித்துத் தனது உதவுத்தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் கைம்பெண் அநாதைப் பிள்ளைகளின் றுபகாரச் சம்பள நிதிக்குச் சேர்ப்பதற்கு எழுத்து மூலம் தன் சம்மதத்தைக் கொடுக்கவேண்டும்.

6. 1 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள காலிஸ்தானங்களுக்குரிய விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் யாவும் இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரிப்படிவத்தினைப்போன்று **விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;**

(ஆ) இலங்கை தரைப்படை தொண்டர் படையின் உறுப்பினர்கள் தம் விண்ணப்பங்களை தம் பேரணித் தலைமை நிலையத்திற் கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பங்கள் யாவும் இராணுவ ஆள்திரட்டும் அதிகாரி, தரைப் படைத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு 1969 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 7 ஆம் திகதி பி. ப. 1.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கச் சமர்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களிலும் அவற்றை அனுப்பும் கடிதவுறையிலும் " விண்ணப்பங்கள் நிரந்தரப்படை புதிய போர் வீரர் " என எழுதப்படல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பங்களுடன் சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மட்டுமே இணைத்தனுப்பப்படல் வேண்டும் :—

(I) பிறப்புச்சான்றுப் பத்திரம். (ஒருவரின் பிறப்பு பதிவு செய்யப்படாதவிடத்து) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப் பத்திரம்) ஞானஸ்நான சான்றுப்பத்திரமோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் நிபந்தனைகளுக்கு இணங்க வழங்கப்படும் பிறப்புச் சான்றுப்பத்திரமோ அல்லது பிற்ப்புக் குறிப்புகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ;

(II) கூடுதலான கல்வித் தகைமையைக் காட்டும் சான்றுப் பத்திரம் ;

(III) விண்ணப்பகாரரின் நன்னடத்தையைக் காட்டும் மூன்று நற்சான்றுப்பத்திரங்கள். இவற்றில் ஒன்று விண்ணப்பக்காரர் ஒருவர் ஊழியம் செய்யின் வேலை பெறுப்வரிடமிருந்து பெற்ற விதப்புரையர்யிருத்தல் வேண்டும் ;

(IV) விளையாட்டுத் தகுதிகள், பயிலுனர் சிறப்பணி, ஆகியவை சம்பந்தப்பட்ட சான்றுப்பத்திரங்கள்.

குறிப்பு.—மேற் கூறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் உண்மைப் பிரதிகள் ஒரு விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்விதமான சான்றுப் சான்றுப்பத்திரங்களின் உண்மைப் பிரதிகளாயினும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட்டு அவை பாலில் தவறிக் காணமல் போனுல் அவைக்குத் தரைப்படை தலைமை நிலையம் பொறுப்பளிக்காது.

(உ) தபாலில் தவறும், அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் பற்றி உண்டாகும் எவ்விதமான குற்றச்சாட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தபாலில் தாமதமாகும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஊ) ஏற்கனவே அரசாங்கத்தில் ஊழியம் செய்யும் விண்ணப்பகாரர்கள் தம் விண்ணப்பங்களைத் தமது பகுதித் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) அரசாங்க பகுதித் தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பிக்கப்பட்டு உரிய காலத்தில் விண்ணப்பங்கள் இத்தலைமை நிலையத்தில் கிடைக்காவிடில், அவ்வாறுன விண்ணப்பங்கள் அவ்வப்பகுதியில் உரிய காரியாலயத்தில் கிடைக்கப் பெற்றது என்றும் ஏற்பட்ட தாமதத்திற்குரிய காரணத்தை அவ்வப்பகுதித் தலைவர்கள் அறிவித்தல் வேண்டும். அவ்வாறல்லாத தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஏ) நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியெனக் காணப்படும் விண்ணப்பகாரருக்கு, நேர்முகப் பரீட்சைக்குரிய திகதி, இடம், நேரம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவித்தல்கள் கிடைக்கப் பெற்றவர்கள் தரைப்படை தெரிவுச்சபைக்குத் தம் சொந்தச் செலவில் சமூகமளித்தல் வேண்டும்.

(ஐ) தரைப்படைத் தேர்வுச்சபையினுல் நேர்முகப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தரைப்படையில் ஆள்திரட்டத் தகுதிவாய்ந்தவர்கள் எனக் காணப்படுபவர்கள் தம் சொந்தச் செலவில் ஒன்று அல்லது பல வைத்தியப் பரிசோதனைகளுக்கு கொழும்பில் சமூகமளித்தல் வேண்டும்.

(ஒ) தரைப்படைத் தேர்வுச் சபையினுல் நடாத்தப்பட்ட நேர்முக, மற்றும் எல்லாப் பரீட்சைகளிலும் சித்திகரமாய்ப் பூர்த்திசெய்து தரைப்படையில் ஆள்திரட்டத் தகுதியடைந்தவர்கள் படையினர் அல்லது அதற்குச் சமமான நிலையில் தரைப்படையின் நிரந்தரப் படையில் ஆள்திரட்டப்பட்டு பயிற்சிக்காக தரைப்படைப் பயிற்சி நிலையத்துக்கு அல்லது வேறு ஏதாவதோர் இடத்துக்கு அனுப்பப்படுவர்.

(ஓ) 21 வயதுக்குட்பட்ட எவரேனும் தம் பெற்றேரின் அல்லது பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்துமூலம் தெரிவிக்காதவிடத்து தரைப்படையின் நிரந்தரப் படையில் ஆள்திரட்டப்பட மாட்டார்கள்.

(ஔ) தரைப்படையின் நிரந்தரப்படையில் ஆள்திரட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆள்திரட்டப்பட்டதும் அவர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல் நடத்தும் பொருட்டு 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க மொழிக் கொள்கைச் சட்டத்திற்கு இணங்கவும் ஏற்கனவே உண்டாக்கப்பட்ட அல்லது இனிமேல் உண்டாக்கப்படும் எந்தச் சட்டத்திற்கும் இணங்க நடக்குமாறும் கட்டாயப்படுத்தப்படுவர்.

(க) எவரேனும் ஒரு விண்ணப்பகாரரை விதந்துரைக்க விரும்பின் அவ்விண்ணப்பகாரருக்கு ஒரு நற்சான்றுப்பத்திரம் கொடுத்துதவுவதன் மூலம் விதந்துரைக்கலாம். அவ்வாறு அல்லாது ஒரு விண்ணப்பகாரர் தெரிவு பெறுவான் வேண்டி ஆதரவு தேடத்துணிவின் அல்லது வயப்படுத்தத் துணிந்தால் குறிப்பிட்ட விண்ணப்பகாரரின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

(கா) விண்ணப்பங்களுடன் பிழையான தகவல்களைத் தெரிவித்திருப்பின், அவ்வாறுனவை தேர்தலுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும். ஆள்திரட்டப்பட்டபின் இவ்வாறுனவை கண்டுபிடிக்கப்பட்டால் தரைப்படையில் இருந்து விலக்கப்படுவது மட்டுமல்லாது ஏற்ற ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர், சீப் ஒப் ஸ்டாப்,
தரைப்படைத் தளபதிக்காக.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு.
1969 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 9 ந் உ.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதி :————. வயது :————.
4. சித்தியடைந்துள்ள கூடுதலான கல்வித்தராதரம் :————. (பாடங்களும் திகதிகளும் குறிப்பிடுக)
5. உயரம் : அடி :————. அங்குலம் :————.
6. நீர் இலங்கைப் பிரசையா? :————.
7. விவாகமானவரா விவாகமாகாதவரா என்பதைக் குறிப்பிடுக :————.
8. பாடசாலையை விட்ட பின் செய்யும் தொழில் :————.
9. இதற்குமுன் தரைப்படை, கடற்படை அல்லது ஆகாயப்படை ஆகிய வற்றில் சேவை செய்திருப்பின், பிரிவு, திகதி, தரம் ஆகிய வற்றின் விபரங்களைக் குறிப்பிடுக :————.
10. வேறு ஏதேனும் தகுதிகள் இருப்பின் (விளையாட்டுக்கள் சம்பந்தமானவை உட்பட) :————.
11. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் :————.
12. அருகாமையில் உள்ள தபால் நிலையம் :————.
13. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் தகுதிகளும்—
    1.————.
    2 :————.
    3 :————.
14. கொழும்பிலுள்ள தரைப்படை வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட பரிசோதனையில் தரைப்படை, கடற்படை அல்லது ஆகாயப்படை ஆகிய ஏதாவது ஒர் படையில் சேவை செய்யத் தகுதியற்றவர் எனத் தள்ளுபடி செய்யப்பட்டதுண்டா :————.
15. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டியது :——

மேலே கேட்கப்பட்டுள்ள வினுக்களுக்கு என்னுல் கொடுக்கப்பட்டுள்ள விடைகளும் தகைமைகளும் எனது அறிவிற்கெட்டியவரைசரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.

திகதி :———— விண்ணப்பகாரரின் கையொப்பம்.

10–676

---

**வவனியா மாவட்டத்தில் நடுச்செட்டிக்குளப் பிரிவிற்குப் பிறப்பு, இறப்பும் வவனியா தெற்குப் பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி**

நடுச்செட்டிக்குளம் பிறப்பு, இறப்பு, பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று இருப்பத்தேரு வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப்பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராக சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்படுகின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பி. சி. பெரோா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம், வவுனியா.
1969 ம் ஆண்டு அக்டோபர் மீ 8 ந் உ.

10–798—17–10–69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

ශ්‍රී ලංකා ... ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව

கமத்தொழில் கடற்றொழில் அமைச்சு

**பிளாஸ்டிக் தயாரிப்பில் பயிற்சி பெறுவதற்கான புலமைப் பரிசில்கள்**

பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் தாபனங்களில் சேவையிலுள்ளவர்களிடமிருந்து ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்பத்திரத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து அதிபர், கைத்தொழில் ஒழுங்குமுறை, கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு, இல. 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு–2 என்ற முகவரிக்கு 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் சேவையிலுள்ள கைத்தொழில் தாபனத்தின் நிர்வாகத்திற்கூடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப் பப் பத்திரத்தினடியிலுள்ள சான்றிதழ் நிர்வாகத்தினரால் கையொப்ப மிடப்படல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் " புலமைப்பரிசில்கள் " என குறித்திருத்தல் வேண்டும். ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார கூட்டுறவு அமைச்சின் மூலமாக புலமைப்பரிசில்கள் ஒழுங்கு செய்யப்பட்ட வகையில் இப்பரிசளிப்புகள் கொடுக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் " சுட்டெட்ஸ் குன்ஸ்ரொப்செண்ட்ரம் " என்னும் தாபனத்தில் (த சவுத் ஜெர்மன் பிளாஸ்டிக் செண்டர்) 12 மாத காலத்திற்கு செயல்முறைப் பயிற்சி பெறவேண்டப்படுவர். ஜெர்மன் பாஷை கற்பதற்கான கால அளவு ஒன்றை இப்பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன் கொண்டுள்ளதாயிருக்கும்.

2. பயிற்சித் திட்டத்தை பூர்த்தி செய்த பின்னர் நாட்டுக்குத் திரும்பியதும் நாட்டின் நலனுக்காக முக்கியத்துவமுள்ள சேவை செய்ய எதிர்பார்க்கக்கூடிய நல்ல புத்திக் கூர்மை அறிகுறியுள்ள நபர்களுக்கு மட்டுமே இப்புலமைப்பரிசில்கள் கொடுக்கப்படும். எனினும் நடத்தைப் பிசகு வரையில் ஒழுங்கீனம் உரிய அதிகாரிகளின் உத்தரவில்லாமல் வரவீனம், அல்லது படிப்பில் திருப்தியில்லாத முன்னேற்றம் ஆகிய காரணங்களுக்காக வழங்கும் தாபனத்தின் விருப்பத்தைப் பொறுத்தி இப்புலமைப்பரிசில் கள் நிற்பாட்டப்படலாம். அத்தகைய நிலைமையில் புலமைப்பரிசில் பெறுவோர் இலங்கைக்கு திரும்பு மாறு வேண்டப்படுவர்.

3. **தகைமைகள் :**

அபேட்சகர்கள் :

(I) இலங்கைப்பிரஜையாகவும் ;

(II) 1970 நவம்பர் மாதம் 1 ஆந் தேதி 30 வயதுக்கு உட்பட்டவராகவும் ;

(III) இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரம் அல்லது பொதுத் தராதரப் பரீட்சை (சாதாரணம்) உடையவராகவும் ;

(IV) பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்புத் துறையில் இரண்டு வயூட அநுபவமுடையவராகவும் ;

(V) கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுடன் பதிவு செய்யப்பட்ட அல்லது அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் தாபனமொன்றில் சேவையிலுள்ளவராகவும்,

(VI) ஆங்கிலத்தில் போதிய திறமை பெற்றவராகவும் ;

இருத்தல் வேண்டும்.

4. **பரிசளிப்பு நிபந்தனைகள் :** தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அல்லது அபேட்சகரின் விண்ணப்பத்தை ஆதரிக்கும் தாபனம் அகில பிரயாணச் செலவுகளைப் பொறுத்தல் வேண்டும். விடுதி, உணவு ஆகியவற்றின் செலவை பரிசரிக்கும் தாபனம் ஏற்றுக்கொள்ளும். பெயர் குறிப்பீடு ஏற்றுக்கொண்டபின்னர் பரிசளிப்பின் சரியான நிபந்தனைகள் கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

5. **நேர்முகப்பரீட்சை :** தகுதியுடைய அபேட்சகர்கள் இடமும் நேரமும் குறிக்கப்பட்டு கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். நேர்முகப்பரீட்சை சம்பந்தமாக பிரயாண அலலது வேறு செலவுகள் கொடுபடமாட்டாது. அபேட்சகர்கள் தங்களது விண்ணப்பத்திற்கு ஆதாரமான சான்றிதழ்கள், பிறப்புச்சாட்சிப் பத்திரம், வேறுஎழுத்திலடங்கிய ஆதாரம் ஆகியவற்றின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்க ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

6. **வைத்திய சோதனை :** தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் வெளிநாட்டில் பயிற்சித் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு தேக, மனோ தகுதியைக் குறிக்கும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசேஷ வைத்திய சபையால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனை யொன்றில் சித்தியடைய வேண்டப்படுவர்.

7. **உடன்படிக்கையும் பிணையும் :** தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள், இத்திட்டத்தின் கீழ் சில குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பொருட்டுப் பிணைமுறியொன்றுடன் குறைநிரப்பப்பட்ட உடன்படிக்கையொன்று அரசாங்கத்துடன் கையொப்பமிட வேண்டப்படுவர்.

8. புலமைப்பரிசில் பூர்த்தி செய்த பின்னர் நாட்டிற்குத் திருவபும் பரிசுச் சம்பளம் பெறுவோருக்கு அரசாங்கம் வேலை கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது.

9. விண்ணப்பத்தில் ஏதாவது கூற்று பிழையாகக் காணப்பட்டால், தெரிவுக்கு முன்னர் இப்பிழை கண்டுபிடிக்கப்பட்டால், விண்ணப்பத்தை தகுதியற்றதாக ஆக்கிவிடும். இப்பிழை தெரிவு செய்தபின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் பரிசளிப்பை வாபஸ் செய்யப்படும்.

10. தேர்ச்சியடைந்த அபேட்சகர் பரிசளிப்பை ஏற்க மறுத்தால் மூன்று வயூட காலங்களுக்கு வேறு எந்த புலமைப் பரிசளிப்பு பெறுவதிலிருந்து தடைசெய்யப்படுவார்.

11. பரிசளிப்புகள் பரிசு வழங்கும் நாட்டினால் பெயர் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், பெயர் குறிப்உட்டுக்காக தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு பரிசளிப்பு கிடைக்குமென்று உத்தரவாதமளிக்கப்பட மாட்டாது.

12. ஓர் விண்ணப்பதாரரின் தெரிவிற்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப்பிரயோகித்தற்கு எத்தளித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளவபரத்தின் தேவைகளுக்கு சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அதிபர்,
கைத்தொழில் ஒழுங்குமுறை.

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு,
48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு–2,
1969 ஆம் ௵ ஒக்டோபர் ௴ 2 [illegible]ம் ௳.

**மாதிரிப்படிவம்**

**பிளாஸ்டிக் தயாரிப்பில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : ———————.
(பெரிய எழுத்துக்களில்)
2. நிரந்தர முகவரி : ———————.
3. பிறந்த திகதி : ———————.
4. தேசிய இனம் : ———————.
5. கல்வித் தராதரங்கள் : ———————.
6. கடந்த 5 வருடகால தொழில் விபரங்கள் : ———————.
(வகித்த பதவிகளின் விபரங்கள், திகதியுடன்)
7. தற்போதைய தொழில் : ———————.
(வசிக்கும் பதவியின் விபரம்)
8. தற்போதைய தொழில் முதல்வரின் பெயரும் விலாசமும் : ———————.
9. தற்போதைய தொழில் முதல்வருக்கு உறவு முறைகள் இருந்தால் தருக : ———————.
10. தற்பொழுது ஈடுபட்டுள்ள கைத்தொழிலின் விபரங்கள் : ———————.
(அ) இடம் : ———————.
(ஆ) தற்போது உற்பத்தி செய்யும் பொருட்கள் : ———————.
(இ) பாவனையிலுள்ள செய்யும் கிராமங்களின் சயூக்கமான விபரம் : ———————.
(ஈ) விஸ்தரிப்பு ஆகியவற்றுக்கான வருங்காலத் திட்டங்கள் : ———.
(உ) 1967, 1968 ஆம் ஆண்டுகளில் உற்பத்தியின் முழுப் பெறுமதி : ———————.
(ஊ) இப்போதுள்ள கைத்தொழிலின் ரீபகரணம் : ———————.
(எ) இப்பொழுதுள்ள கைத்தொழிலின் மூலதன முதலுடு : ———.
(ஏ) கைத்தொழில் அனுமதி வழங்கப்பட்ட இலக்கமும் திகதியும் அல்லது பதிவு இலக்கமும் திகதியும் : ———————.

என்னால் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் எனது திறமை அறிவுக்கு உண்மையென்றும் செம்மையென்றும் இத்தால் உறுதிப் படுத்துகிறேன். இந்தப் புலமைப் பரிசிலுக்கு நான் தேர்ந்தெடுக்கப் பட்டால், எனது திறமை ஆற்றலுக்கு புலமைப் பரிசிலைப்பெற்று அத்தகைய புலமைப் பரிசில் சித்தியடைந்தவுடன் இத்தீவுக்குத் திரும்புவதென்றும் நான் பொறுப்பேற்கிறேன். மேற்சொல்லப்பட்ட கட்டுப் ப்பாடுகளை நிறைவேற்றுவதில் நான் தவறினால், எனது பயிற்சிக்கான எல்லாச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குக் கொடுப்பதென்று நான் பொறுப்பேற்கின்றேன். புலமைப்பரிசிலுக்கு தேர்ந்தெடுக்கப்படின் ஒரு பிணை முறியும் ஒரு உடன்படிக்கையும் கைச்சாத்திடுவதென்று இத்தால் நான் பொறுப்பேற்கிறேன்.

———————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ———————.

**நிர்வாகஸ்தரின் சான்றிதழ்**

(விண்ணப்பதாரர் ஊழியராக இருந்தால்)

நான்

(அ) விண்ணப்பதாரர் இந்த ஸ்ரீறுவனத்தின் நிரந்தர ஊழியர், அவர் எங்களுடன்............வயூடங்களாக பணிபுரிகிறார். தற்பொழுது அவரது நிலைமை.......................... அவரது கடமைகள்..........................

(ஆ) அவர் தனது பயிற்சி முடிவடைந்து இத்தீவிற்குத் திரும்பியதும் இந்த நிறுவனத்தால்.......................... என்ற தகுதியில் மீண்டும் பணிபுரிய நியமிக்கப்படு. .ார் என உறுதிப்படுத்துகிறேன்.

(இ) விண்ணப்பத்தின் 10 வது கலத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை.

கையொப்பமும் பதவியும்.

திகதி : ————.

10–560

---

**தேசிய புராதன சாசனத் திணைக்களம்**

தேசிய புராதன சாசனத் திணைக்களத்தில், இத் திணைக்களத்தின் பதிச் சுவடிகளை அட்டவணைப்படுத்தலும் பட்டியல் தயார் செய்வதற்கு மான விண்ணப்பங்கள், பட்டதாரிகளிடத்திருந்தும் பட்டத்திற்கான இறு திப்பரீட்சை முடிவுகளை எதிர் பார்ப்பவர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன. இப்பதவி அமயத்துக்குரியதாக இருக்கும்.

2. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் பின்வரும் தகைமைகளுடையவரென்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்க கத்தின் பட்டதாரி அல்லது இறுதிப் பரீட்சை முடிவுகளை எதிர்பார்ப்பவர்.

(ஆ) பட்டப் பரீட்சையில் கீழ்க்காணும் பாடங்கள் ஒன்றிலாவது சித்தி யெய்தியிருத்தல் வேண்டும்.

(1) சரித்திரம்.

( ) கீழைநாட்டு அல்லது மேலைநாட்டு மொழிகள்.

(இ) ஆங்கிலத்தில் சிறந்த விவேக முடையவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

3. **படிகள்.**—நாளொன்றிற்கு ரூபா 7.50 வழங்கப்படும். (யாவும் உட்பட. அதிகப்படியான வேறு படிகள் வழங்கப்படமாட்டாது).

4. **நியமன நியதிகள்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் போயா தினம் மற்றும் அரசாங்க விடுதலை நாட்கள் தவிர்ந்த மற்ற எல்லா நாட்களிலும் சாதாரண வேலை நேரங்களில் வேலை செய்ய வேண்டப் படுவர். இப்பதவி முற்றாக அமயத்துக்குரியது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமாகவோ அல்லது தற் காலிகமாகவோ பதவி கோரப்படலாகாது.

5. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப்படிவத் தில் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தினுல் செய்யப்பட்டு, பணிப் பாளர், தேசிய புராதன சாசனத் திணைக்களம், கங்கொடவில, நுகே கொடை என்ற முகவரியில் 31.10.1969 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். இவ்வறிவித்த லுக்கு இணங்கியிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அ. தேவராஜா,
பணிப்பாளர்,
தேசிய புராதன சாசனத் திணைக்களம்.

தேசிய புராதன சாசனத் திணைக்களம்,
கங்கொடவில,
நுகேகொடை,
1969 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 6 ந உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**தேசிய புராதன சாசனத் திணைக்களத்தில் பதிவுச் சுவடிகளை அட்டவணைப் படுத்தலும் பட்டியல் தயார் செய்தலுக்குமான அமயத்துக்குரிய பதவி விண்ணப்பங்கள்**

1. முழுப் பெயர் : ————.
2. முகவரி : ————.
3. வயது : ————.
4. தேசிய இனம் : ————.
5. கல்வித் தகைமைகள் :—

( ) பட்டதாரியா அன்றி இறுதிப் பரீட்சை முடிவுகளை எதிர்பார்ப் பவரா : ————.

( ) பட்டத்திற்கான பாடங்களும் வருடமும் : ————.

( ) பல்கலைக்கழகம் : ————.

( ) ஆங்கிலத்தில் மிக உயர்ந்த தகைமைகள் : ————.

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என்றும் உண்மை யானவை

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

10–604—17.10.69 ந திகதிய வர்த்தமானி இல். 14,877.

---

**மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை வடக்குப் பிரிவின் எலமல்பொத்தைப் பகுதிக்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி**

மாத்தளை வடக்குப் பிரிவின் எலமல்பொத்தை முஸ்லிம் விவாகப் பதிவுப் பகுதியில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர் களான விவாகமான இஸ்லாமிய ஆண்கள் மேற்படி பதவிக்கு விண்ணப் பித்துக்கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்களடங்கிய அறிவித் தல்கள் இந்த அலுவலகத்திலும் மற்றும் இப்பகுதியிலுள்ள காரியாதி காரிகளின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளரின் அலுவலகங் களிலும், உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங் களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலீஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத் தாபன நிலையங்களிலும் மற்றும் இப்பிரிவின் பிரசித்த இடங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

3. இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்தி ரங்களில் தயாரிக்கப்பட்ட எல்லா விண்ணப்பங்களும் 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று, அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எஸ். பீ. உதலாகம,
மாவட்டப் பதிவாளர்.

மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மாத்தளை, 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மீ 6 ஆந் உ.

10–685—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இஇ.

**காணி அபிவிருத்தித் திணைக்களம்**

காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் தொழில்பயில் படவரைஞருக்கான பதவியொன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **வேண்டிய தகைமைகள்.**—

( ) விண்ணப்பதாரர் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

(II) அவர்கள் விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாத வராகளாக்வும், 24 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(III) (அ) தூயகணிதத்தை ஈரு பாடமாகக் கொண்ட சிரேட்ட தராதரப் பரீட்சைச் சான்றிதழை உடையவராக இருத்தல் வேண்டும். அல்லது கல்விப் பொதுத் தராதர (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம்–தமிழ் மொழியுடன் தூயகணிதம் உட்பட ஆறுபடங்களில் இரண்டுக்கு மேற்படாத இருக்கைகளில் தோன்றிச் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடையவராயும் இருத்தல் வேண்டும்,—

(ஆ) செய்முறைத் தொழில்நுட்பவியற் கல்வி நிலையத்தில் (படவரைஞர் பயிற்சி நெறியை) ஒருவருட முழுநேரத்தில் பூர்த்திசெய்தவராகவும்,

அல்லது

(இ) ஒரு சிரேட்ட தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் கனிட்ட தொழில் நுட்ப அலுவலர்களுக்கான (இருவருட) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.— 1969 இல் மேற்படி பரீட்சையின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் விண்ணப்பதாரர்கள் பெறுபேறுகளை எதிர்பார்த்து விண்ணப்பிக்கலாம்.

3. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் 1969.11.17 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ காணி அபிவிருத்தி அதிபர், தபாற் பெட்டி எண் 529, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூல இதழ்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.—

(I) உயர் கல்விச் சான்றிதழ்.

(II) உயர் தொழில்நுட்பக் சான்றிதழ்.

(III) பிறப்புச் சான்றிதழ்.

(–I) அண்மையில் பெறப்பட்ட இரமூன்று நற்குணச் சான்றிதழ்கள்

4. **சம்பளம்.**—தொழில் பயில் காலம் ரூபா 960—72 — 2 ரூபா 1,104 வருடாந்தம்.

5. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—தொழில் படவரைஞர் பதவிகள் தற்காலிகமானவையும் ,இளைப்பாற்றுச் சம்பளம் பெறமுடியாதவையுமாகும். அத்துடன் வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் அரசாங்க சேவைச் சகாய நிதிக் உதவு தொகை செலுத்த வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்.**—

( ) தெரிவு செய்யப்பட்டவர்கள், குறித்தப்பயிற்சியை நேர்மையாகவும் விடாமுயற்சியாகவும் முடித்து, 2 ந்தர படவரைஞர்க்குரிய தகைமையைப் பெற்று (தேவையேற்படின்) திணைக்களத்தில் 2ந்தர படவரைஞராக 5 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்குச் சேவையில் ஈடுபடுவதாக திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்து முகமாகப் பயிற்சிபெறுவோரும், அவரின் பெற்றோரும் அல்லது பாதுகாவலரும் 2,000 ரூபாவிற்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். இந்த ஒப்பந்தத்திற்கு இரிவர் பிணை நிற்கவேண்டும்.

(II) பந்தி 2 (III) (ஆ) விற் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் வேலைக்கு எடுக்கப்பட்டதர் இரண்டு வருட காலத்திற்கும், பந்தி 2 (III) (இ) யிற் குறிப்பிடபட்டுள்ள தகைமைகளுடன் எடுக்கப்பட்டவர் ஒருவருட காலத்திற்கும் செய்ல்குறைப் பயிற்சி ஒன்றைப் பெறவேண்டும்.

(III) பயிற்சி நெறியை முடித்துத் திணைக்களத்தால் நடாத்தப்படும் குறித்த தொழில்நுட்பப் பரீட்சையிலும் சித்தியெய்திய பின், பதவி வெற்றிடங்கள் இருப்பின் பயிற்சியாளரை 2 ஆம் தர படவரைஞராக நியமனம் செய்வதுபற்றி ஆலோசிக்கப்படும். ஆனல் அவர் நியமனம் செய்யப்படுவாரென்ற உறுதியளிப்பதற்கில்லை.ஊ

(I–) வேலைக்கு எடுக்கப்பட்டவர், அலுவலகத்திலும், வெளிக்களங்களிலும் வேலை செய்ய வேண்டும்.

(—) அரசாங்க மொழிக் கொள்கையைச் செய்ற்படுத்து முகமாகவும் முக்கியமாக 1956 ம் ஆண்டின் அரசாங்க மொழிச்சட்டம் இலக்கம் 33 ல் உள்ள ஏற்பாடுகளைச் செயற்படுத்து முகமாகவும் இதுவரை ஆக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கவும் இனி ஆக்கப்படும் விதிகளுக்கிணங்கவும் தொழில் பயில்வோர் ஒழுக வேண்டும்.

(–I) அரசாங்கசேவை ஆணைக்குழுவின் விதிகள், அரசாங்க நிதி, நிருவாகப் பிரமாணங்கள், திணைக்களத்தின் விதிகள், பிரமாணங்கள், மற்றும் அரசாங்கத்தால் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றிற்கும் இணங்க இவர்கள் ஒழுகவேண்டும்.

7. அரசாங்கசேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருநதும் பொது நிபந்தனைகள் அரசாங்க வர்த்தமானியின் 1 ஆம் பாகம் 11 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றைப் பார்க்குக.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

அமரதாச குணவர்த்தனுன,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
கொழும்பு 1, 1 ஒக்ரோபர் 1969.

**மாதிரிப் படிவம்**

**காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் தொழில் பயிலும் படவரைஞர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்தில்)

2. முகவரி :————.

3. ( ) தேசிய இனம் :————.

(II) இலங்கையாரயின் பரம்பரையினாலோ அல்லது பதவினாலோ ? பதவினாலெனில் பதிவுச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடப்படல் வேண்டும் :————.

4. பிறந்த திகதி :————. 17.11.69 ல் வயது

5. முழுப் பெயரும் குகவரியும் :————.

(I) தந்தை :————.

(I) தந்தை :————.

(II) தாய் :————.

(III) பெற்றோர் இல்லாவிடில் பாதுகாவலர் :————.

6. உயர் கல்விப் பேறுகள் :————.

7. உயர் நுண்தொழிற் தகைமைகள்.————.

8. நற்குணச்சான்றிதழ் வழங்கியோரின் பெயர்களும், குகவரிகளும்.—

9. பாடசாலையை விட்ட காலமுதல், ஏதாவது தொழிலில் ஈடுபட்டிருப்பின் அவற்றின முழுவிபரங்கள் :————.

10. இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபவங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும், நீதிமன்றச சட்டங்களின் கீழ் நான் குற்றவாளியாகக் காணப்படவில்லை யென்றும், அரசாங்க சேவையிலிருந்து நான் வேலை நீக்கம் செய்யப்படவில்லையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் .தேர்வுக்குப் பின்னராயின் நட்டஈடு எவுதுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

10600

## இலங்கை வங்கி

### ஆளணி உதவியாளர் பதவிகள் வகுப்பு 1, வகுப்பு 11

வங்கியின் சேவையில் ஆண் ஆளணி உதவியாளர் வகுப்பு 1, வகுப்பு 11 ஆகிய பதவிகளுக்காய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முகாமையாளர், ஆளணிப்பகுதி, மத்திய அலுவலகம், இலங்கை வங்கி, கொழும்பு 1, என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய அச்சிட்ட படிவங்களிலான விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன் அவரை வந்தடைதல் வேண்டும்.

அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தைத் தபாலிற் பெற விரும்புவோர் தமது முகவரி யிடப்பட்ட முத்திரையிட்ட (9"—4") அளவினதான தபாலுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**(1) தகைமைகள் :**

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் :—

(அ) இலங்கைப் பிரசை எனப்பதற்கும் ;

(ஆ) 31.10.1969 ல் 26 வயதிற்கு குறைந்தவர் எனப்பதற்கும் ; திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

**ஆளணி உதவியாளர் வகுப்பு 1** பதவிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் :—

(அ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டதாரியாக **அல்லது**

(ஆ) (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையின் 2 பகுதிகளிலும் சித்தியெய்தியவராக அல்லது

(இ) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் (இலங்கை) நடாத்தப்படும் இடை, இறுதிப்பகுதிப் பரீட்சையின் இரண்டு பகுதிகளிலும் சித்தியெய்தியவராக, **அல்லது**

(ஈ) ஒரு வழக்கறிஞராக, **அல்லது**

(உ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்புளோமா அல்லது வர்த்தக டிப்புளோமா பெற்றவராக **அல்லது**

(ஊ) மேற் கூறப்பட்டவைக்குச் சமமான அல்லது அவற்றிலும் உயர்ந்த தராதரங்கள் உடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆளணி உதவியாளர் வகுப்பு 11** பதவிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் :—

(அ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் (பொது அல்லது விசேட) பட்டதாரியாக 1 வது அல்லது 2 வது பிரிவில் சித்தியெய்தியவராக, **அல்லது**

(ஆ) வழக்குரைஞர் இறுதிப் பரீட்சையில் 1 வது பிரிவில் சித்தியெய்தியவராக இருத்தல் வேண்டும்.

(இ) நன்கு மதிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் (பொது அல்லது விசேட) பட்டதாரியாக 1 வது அல்லது 2 வது பிரிவில் சித்தியெய்தி அத்துடன் வங்கித்தொழிலில் அல்லது கணக்கியலில் அனுபவமும் கொண்டிருப்பவர்கள் 1969 ம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 31 ஆம் திகதியன்று 30 வயதிற்குக் குறைந்தவர்களாயிருப்பின் அவர்களது விண்ணப்பங்களும் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படும். இவ்வகையில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவர்கள் அனுபவத்திற்கேற்ப தகுந்த சம்பள நிலையில் வைக்கப்படுவர்.

**(2) சம்பளமும் படிகளும் :—**

(அ) ஆளணி உதவியாளர் வகுப்பு 1 : மாதமொன்று ரூபா 325 – ;

(ஆ) ஆளணி உதவியாளர் வகுப்பு 11 : மாதமொன்று ரூபா 360 –;

(இ) கீழுற்ற 4 (ஈ) யின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தபின் ஏற்புடைத்தாகும் சம்பள வீதம் :—
ரூபா 375 – தொடக்கம் ரூபா 965 – வரை
3—25, 1—35, 8—30, 6—40
வினைத்திறமைகாண் தடை ரூபா 605 – இலும் ரூபா 805– இலும்.

(ஈ) இலங்கை வங்கியின் விதிதத்தில் வாழ்க்கைச் செலவுப்படிகள்.

குறிப்பு :— (I) ஆளணி உதவியாளர் வகுப்பு 1 பதவிகளுக்கு நியமிக்கப் படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ரூபா 325 – சம்பள அடிப்படையில் பயிற்சிக் காலத்தின் போது ஊதியமளிக்கப்படுவர். இப்பயிற்சிக்காலம் 2 வருடங்களுக்குக் குறையாததாகவிருக்கும். அவர்களின் பதவிகள் நிரந்தரமாகும்பொழுது ரூபா 375 – சம்பள நிலையில் வைக்கப்படுவர். வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி ரூபா 605 –, ரூபா 805 – ஆகிய இரசம்பள நிலைகளில் இரண்டு வினைத்திறமைகாண் தடைகளைத்தாண்டவேண்டும் ரூபா 605 – சம்பள நிலையில் முதல் வினைத்திறமைகாண் தடையைத்தாண்டுவதற்கு (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையின் 2 பகுதிகளிலும் அல்லது அதற்குச் சமமான (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்துவதுடன் வங்கியின் கருமப் பரீட்சையிலும் சித்தியெய்தி முதற்றர வேலைத்திறன் உடையவராகவும் இருத்தல்வேண்டும். இரண்டாவது வினைத்திறமைகாண் தடையைத்தாண்டி மாதம் ரூபா 805 – பெறுவதற்கு மேலும் ஒரு கருமப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

(II) ஆளணி உதவியாளர் வகுப்பு 11 பதவிகளுக்கு நியமிக்கப் படுவதற் காகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ரூபா 360 – சம்பள அடிப்படையில் பயிற்சிக் காலத்தின் போது ஊதியமளிக்கப்படுவர். இப்பயிற்சிக்காலம் இரண்டு வருடங்களுக்குக் குறையாததாக இருக்கும். அவர்களின் பதவிகள் நிரந்தரமாகும்பொழுது ரூபா 485 – (அதாவது விகிதத்தில் 5 வது நிலையில்) சம்பள நிலையில் வைக்கப் படுவர். வங்கியின் ஒழுங்கு விதிகளின்படி ரூபா 805 – நிலையில் வைக்கப்படுவதற்கு ஒரு வினைத்திறமை காண் தடையைத்தாண்டவேண்டும். இந் நோக்கத்துடன் (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் 2 பகுதிகளிலும் அல்லது அதற்குச் சமமான (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்து வதுடன் வங்கியின் வருமப் பரீட்சையிலும் சித்தியெய்தி முதற்றர வேலைத்திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) பிணை :—தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒன்றில் காசாக அல்லது பற்றுறுதி முறியாக அல்லது இவை இரண்டுமாகச் சேர்த்து 10,000 ரூபாவரை அவர்களது கடமைகளை முறையாகவும் நம்பிக்கையாகவும் புரிவதற்குப் பிணையாகச் செலுத்தவேண்டும்.

(4) சேவை நிபந்தனைகள் :—தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் :—

(அ) நியமனத்திற்கு முன்னதாக வைத்திய பரிசோதனை செய்யப்பட்டு அதில் தகுதியுடையராய்க் காணப்படல்வேண்டும் ;

(ஆ) 2 வருடத்திற்கு குறையாமலும் 3 வருடத்திற்குக் கூடாமலும் தகுதிகாண் நிலையில் கடமையாற்றவேண்டும். இக்காலத்திட்குள் அரசகரும மொழியில் --- ஆம் தர நிலையில் ஓர் தேர்வுப் பரீட்சையில் சித்திபெற வேண்டும். எனினும் முகாமையாளர் விரும்பினால் அதிவிசேட சந்தருப்பங்களில் தகுதிகாண் நிலையின் கால எல்லையை மேலும் ஒரு வயூடத்திற்கு நீடிப்பதற்கு தற்றுணிபுடையராவார் ;

(இ) தகுதிகாண் காலத்துள் (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையின் 1 வது பகுதியில் அல்லது அதற்குச்சமமான (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தவேண்டும் ;

(ஈ) மேற்கூறப்பட்ட சம்பள நிலையில் வைப்பதற்கு சேவையில் சேர்ந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி இருத்தல் வேண்டும் அல்லது அரசகரும மொழியில் " ஆம் தரநிலையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் (இதில் எது பிந்தியதோ) அத்துடன் (இலண்டன்) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் அல்லது (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இதையொத்த உள்ளூர் பரீட்சையில் சித்தியெய்தி அத்துடன் முதற்றர வேலைத்திறன் உடையவர்யும் இருத்தல் வேண்டும் ;

(உ) ஆண் சேராட்களுக்கென இருக்கும் வங்கியின் ஓய்வுகால உபகாரச் சம்பளத்திட்டத்தில் சேரவேண்டும் ;

(ஊ) மேற்கூறிய 4 ஆம் வாசகத்தின் (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைத் திருத்திப்படுத்தும் திகதியிலிருந்தே குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்படுவர் ;

(எ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கு இப்போதுள்ள அல்லது வருங்காலத்தில் புகுத்தப்படக்கூடிய எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்குட் படல்வேண்டும்.

(5) பொது :—(அ) விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணப்படுவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும் :—

( ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (குறிப்பு :–ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிப் பணம் பெறும் பாடசாலைகளுக்கான கட்டளைச் சட்டக் கோவைகளின் பொருட்டு விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

( ) உயர்நிலைக் கல்வித் தராதரச் சான்றிதழ்கள்.

( ) விண்ணப்பதாரரின் திறமை, நடத்தை பற்றி அண்மையில் பெறப்பட்ட மூன்று நற்சாட்சிப்பத்திரங்கள்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்படுவர். இதற்கான பிரயாணச் செலவோ வேறு செலவோ வங்கியால் வழங்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். **தங்கள் விண்ணப்பங்கள் கிடைத்ததற்குப் பதில் வேண்டுவோர் தங்கள் முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.**

(ஈ) விண்ணப்பங்கள் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் " ஆளணி உதவியாளர் விண்ணப்பம் வகுப்பு 1 அல்லது வகுப்பு 11 அல்லது இரண்டும் " என்று தெளிவாக எழுதப்படவேண்டும்.

(உ) விண்ணப்பப் பத்திரங்கள், அல்லது விண்ணப்பங்கள் காணமற் போனதாக வோ, அல்லது தபாலில் பிந்தியதாகவோ கூறப்படும் சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவு திகதிக்கு சில நாட்களுக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்புபவர்கள் தாங்களே இடர்களுக்கு பொறுப்பாயிருப்பர்.

(ஊ) வேண்டப்படும் தகுதிகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஈ. பெரேரா,
முகாமையாளர், ஆளணிப்பகுதி.

**10–716—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.**

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்
### வெற்றிடங்கள்

**தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் பதவிகள் 11 ஆம் தரம்**

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—இரசாயனம், தாவரவியல்-உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களைக் கொண்ட உ. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்திருப்பதுடன் ஒரு ஆய்வுகூடத்தில் 2 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்; அல்லது இரசாயனம், தாவரவியல்-உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து வருட ஆய்வுகூட அனுபவமும் உடையவராக இருக்க வேண்டும்.

**வயது.**—30 பதிற்குக் கீழ்.

**சம்பளம்.**—ரூபா $\frac{360—450}{6 \times 15}$ மா ஒ. (எல்லாம் உட்பட) அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க உதவி பெறும் திணைக்களங்கள், மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங்கள் அனுப்பும் ஊழியர்கள் அவ்விண்ணப்பங்களைத் தமது திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யபடும் விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய-பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும், அத்துடன் அவர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக ஏற்கனவேயும் இனிமேலும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

வாழைச்சேனையில் அல்லது இத்தீவினுள்ள இச்கூட்டுத்தாபனத்தின் எந்த நிறுவனங்களிலும் தங்கியிருந்து வேலை செய்யும்படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம் என்பவற்றிற்குத் தக்கதாய அவர்கள் மேற்படி சம்பள வரிசையில் தகுந்தபடி நியமிக்கப்படலாம்.

இக்கந்தோரில் கிடைக்கப் பெறும் படிவங்களில், விண்ணப்பதாரர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 7.11.1969 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தலைவர் அவர்கட்கு கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தபாலில் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புபவர்கள், தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

தேவையான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
த. பெ. 1367,
கொழும்பு 2,
1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மீ 1 ஆந் டை.

10-715/1—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,877.

---

### கிழக்கிழங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்
### வெற்றிடங்கள்

**தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் பதவிகள் 111 ஆம் தரம்**

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—இரசாயனம், தாவரவியல்-உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களைக் கொண்ட உ. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்திருப்பதுடன் ஒரு ஆய்வுகூடத்தில் 1 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும். அல்லது இரசாயனம் தாவரவியல்-உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் ஆகக் குறைந்தது மூன்று வருட ஆய்வுகூட அனுபவமும் உடையவராக இருக்க வேண்டும்.

வயது.—30 பதிற்குக் கீழ்.

சம்பளம்.—ரூபா $\frac{285—375}{6 \times 15}$ மா. ஒ. (எல்லாம் உட்பட) அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க உதவிபெறும் திணைக்களங்கள், மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பவ்ற்றிலிருந்து விண்ணப்பங்கள் அனுப்பும் ஊழியர்கள் அவ் விண்ணப்பங்களைத் தமது திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய-பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும், அத்துடன் அவர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக ஏற்கெனவேயும் இனிமேலும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

வாழைச்சேனையில் அல்லது இத்தீவினுள்ள இக்கூட்டுத்தாபனத்தின் எந்த நிறுவனங்களிலும் தங்கியிருந்து வேலை செய்யும்படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம் என்பவற்றிற்குத் தக்கதாய் அவர்கள் மேற்படி சம்பள வரிசையில் தகுந்தபடி நியமிக்கப்படலாம்.

இக் கந்தோரில் கிடைக்கப்பெறும் படிவங்களில், விண்ணப்பதாரர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 7.11.69 ஆந் திகதியன்றோ, அல்லது அதற்கு முன்னரோ தலைவர் அவர்கட்கு கிடைக்கக்கூடியதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தபாலில் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புபவர்கள் தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

தேவையான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
த. பெ. 1367,
கொழும்பு 2,
1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மீ 1 ஆந் டை.

10-715/2—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,877.

---

### உபஅஞ்சல் அதிபருக்கான பதவி "ஏ" உபஅஞ்சல் அலுவலகம்
### சிறி குணனந்த மாவத்தை

கொழுவபு 13 இல் உள்ள சிறி குணனந்த மாவத்தை றீபஅஞ்சல் அலுவலகத்தின் றீபஅஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த மாதாந்தப்படி ரூபா 75.

1. விண்ணப்பங்கள் இரு பாளரிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் இலங்கையராகவும். 19.11.18 ஆம் திகதி அன்று 21 வயதுக்கு குறையாதவர்களாகவும், 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரர்கள், 10 வருடங்களோ, அல்லது அதற்குக் கூடுதலாகவோ மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். உபஅஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள வட்டாரத்தில் அல்லது அதற்கு அருகாமையிலுள்ள வட்டாரங்களில் வதியும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. சி. த. ப.-க. பொ. த. பரீட்சையில், தமிழ்-சிங்களம், எண்-கணிதம் உட்பட மூன்று பாடங்களிலாவது விண்ணப்பதாரர்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. சிறி குணனந்த மாவத்தை றீபஅஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு, வாடகை இன்றி ஒரு வீட்டினை விண்ணப்பதாரர் அளித்தல் வேண்டும்.

5. கொழுவபு 1, எச்சலன் சதுக்கம் 5-ஆம் இலக்க கட்டிடத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சர் (மேற்கு, தெற்கு) அவர்களிடமிருந்து அச்சடித்த விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 1969 1969.11.18 ஆம் திகதியன்று, அல்லது அதற்கு முன்னராக அவரை அடையக்கூடியதாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

மேலும், விவரங்களை அறியவிரும்பினால், அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்த் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும், தந்தி பொக்குவரத்து அதிபரும்.

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் பதவி (தமிழ்)

மேற்காணும் மொழி பெயர்ப்பாளர் பதவிக்குப் பின் வருந்தகைமைகளையுடைய இலங்கையார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) மிகக் குறைந்த பட்சக் கல்வித் தகைமைகள்.—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கொண்டுள்ள, ஒரு பட்டதாரி

அல்லது

தமிழில் சிறப்புப்பட்டத்துடன், ஆங்கிலம் ஒரு பாடமாகக் கொண்டுள்ள பட்டதாரி.

(ஆ) வயது.—விண்ணப்பதாரிகள் 27–10–69 அன்று 40 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

சம்பளத்திட்டம்.—ரூபா 585—ரூபா 25—ரூபா 835 (மொத்தச் சம்பளம்) சேமலாப நிதி.ஊழியர் 10 சத வீதமும், ஸ்தாபனம் 15 சத வீதமுமாகக் கொடுக்கப்படும்.

அரசாங்க சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தோ அல்லது கூட்டுத்தாபன ஊழியர்களிடமிருந்தோ வரும் விண்ணப்பங்கள் அவ்வுத் திணைக்களத் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் நியமனம் பெறுங்கால் அவர்கள், அவர்களது சேவையிலிருந்து விலக அனுமதிப்பதாக அவர்களின் தலைவர்கள் இணைந்தாற்றான் பதவி நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவம் போன்ற படிவத்தில் தயாரிக்கப்பட்டு 27–10–69 ல் அன்று அல்லது அதற்குமுன்பு, கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன ஆளணி முகாமையாளருக்கு, இல. 21, வக்சால் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
கூட்டுறவு மொத்த ஸ்தாபனம்,
இல. 21, வக்சால் வீதி,
கொழும்பு 2. 2–10–69.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

..................பதவிக்கான விண்ணப்பம்

1. பெயரும் விலாசமும் :————.
2. பிறந்த திகதி :————.
   (பிறப்பு அத்தாட்சிப்பத்திரப் பிரதி இணைத்தல் வேண்டும்).
3. தேசிய இனம் :————.
4. கல்வித் தராதரம் :————.
   (பரீட்சைச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்).
5. அனுபவம் :————.
6. விண்ணப்பதாரரின் குணத்திற்கும், திறமைக்கு உத்தரவாதம் அளிக்கும், இரு கனவான்களுடைய பெயர்களும் விலாசங்களும் :————

மேற்கூறப்பட்ட விபரங்கள் அனைத்துஞ் சரியானவையென்றும் உண்மையானவை என்றும், நான் நிரூபிக்கின்றேன்.

————,

திகதி :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

10–695.—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

---

## கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### தத்துவ அதிகாரப் பணியாட்கள் வெற்றிடங்கள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பல்வேறு முகாமைகளிலும், பிரிவுகளிலும், பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

**1 கணக்காளர்கள்—தரம் 4**

(அ) விண்ணப்பதாரர் " சாட்டற் " (பட்டயக்) கணக்காளர்களாயோ அல்லது அதற்குச் சமமான தராதரங்கள் கொண்டவர்களாயோ, இருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) விண்ணப்பதாரர்கள் " இலங்கை சாட்டட் அக்கவுண்டன்ஸ் இன்ஸ்ரிற்றியூட் " இலங்கை பட்டயச் சாட்டற் கணக்காளர் ஸ்தாபனத்தாரின் இடைநிரற் தரப் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளவராயோ அல்லது, அதற்குச் சமமான தராதரங்கள் கொண்டு, குறைந்த பட்சம் 10 வருட அனுபவங்கள் கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாக ஒரு சேர, ரூபா 1,000—50—1,500 ஆகும்.

**2 கணக்காளர்கள்—தரம் 5**

விண்ணப்பதாரர்கள், இலங்கை சாட்டற் கணக்காளர் ஸ்தாபனத்தாரின் இடைநிரற் தரப் பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளவராயோ, அல்லது அதற்குச் சமமான தராதரங்கள் கொண்டு குறைந்த பட்சம் 2 வருட அனுபவங்கள் கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூபா 720—40—50—1,250 ஆகும்.

**3 புள்ளிவிபர நுண் ஆய்வாளர்கள்—தரம் 1**

சிரேஷ்ட கல்வித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன், ஒரு அரசாங்க திணைக்களத்திலோ, அரசாங்க கூட்டுத்தாபனத்திலோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிலையத்திலோ, குறைந்த பட்சம் 12 வருடம் வருடகால புள்ளிவிபர வேலை அனுபவங்கள் கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒரு சேர, ரூபா 550—25—650 ஆகும்.

**4 புள்ளிவிபர நுண் ஆய்வாளர்கள்—தரம் 2**

சிரேஷ்ட கல்வித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் ஒரு அரசாங்க திணைக்களத்திலோ, அரசாங்க கூட்டுத்தாபனத்திலோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிலையத்திலோ குறைந்த பட்சம் 8 வருடகாலப் புள்ளி விபர வேலை அனுபவங்கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம் மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒரு சேர, ரூபா 450—20 —550 ஆகும்.

**5 புள்ளி விபர நுண் ஆய்வாளர்கள்—தரம் 3**

சிரேஷ்ட கல்வித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் ஒரு அரசாங்க திணைக்களத்திலோ, அரசாங்க கூட்டுத்தாபனத்திலோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிலையத்திலோ, புள்ளி விபர வேலையிற் குறைந்த பட்சம் 6 வருடகால அனுபவங் கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூபா 345—15—450 ஆகும்.

**6 புள்ளிவிபர நுண் ஆய்வாளர்கள்—தரம் 4**

சிரேஷ்ட கல்வித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் ஒரு அரசாங்க திணைக்களத்திலோ அரசாங்க கூட்டுத்தாபனத்திலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிலையத்திலோ புள்ளிவிபர வேலையிற் குறைந்த பட்சம் 3 வருடகால அனுபவங் கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூபா 280—10—350 ஆகும்.

**7 பணப்பொறுப்பு எழுதுவினைஞர்—தரம் 2**

சிரேஷ்ட கல்வித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் ஒரு அரசாங்க திணைக்களத்திலோ, அரசாங்க கூட்டுத்தாபனத்திலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்த நிலையத்திலோ பணப்பொறுப்பாளராயோ சிருப்பராகவோ குறைந்த பட்சம் 8 வருடகால அனுபவங் கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூபா 450—20—550 ஆகும்.

**தரம் 3**

சிரேஷ்ட கல்வித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன், ஒரு அரசாங்க திணைக்களத்திலோ, அரசாங்க கூட்டுத்தாபனத்திலோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிலையத்திலோ பணப்பொறுப்பாளராயோ, சிருப்பராகவோ குறைந்த பட்சம் 6 வருடகால அனுபவங்கொண்டவராயுமோ இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் உருசேர, ரூபா 345—15—450 ஆகும்.

பணப்பொறுப்பு எழுதுவினைஞர் பதவிகளுக்குரிய விண்ணப்பதாரர்களுக்கு எழுதுவினைஞர்த் தொழில் அனுபவங்கள் மேலதிக தகைமையுடையவர்களாகக் கவனிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், பின்வருமாறு பணப்பிணை செலுத்துதல் வேண்டும்.

(அ) பணப்பொறுப்பு எழுதுவினைஞர் தரம் 2

ரூபா 2,500 பணமாகச் செலுத்தல் வேண்டும், அல்லது 1,500 பணப் பிணையாகவும், மீதியான ரூபா ஐ1,000 த்தையும் மாத வாரியாகச் சம்பளத்திலிருந்து கழித்துச் செலுத்தி வைக்கவேண்டும். இதனோடு கூட, ரூபா 5,000 தொகை பெறுமதிக்கு ஒரு நேர்மைப் பிணைப்பத்திரம் கோரப்படும்.

ஆ) பணப்பொறுப்பு எழுதுவினைஞர்—தரம் 3

ரூபா 1,500 பணப் பிணையாகச் செலுத்தல் வேண்டும், அல்லது ரூபா 750 பணப்பிணையாகவும், மீதியான ரூபா 750 தையும் மாத வாரியாகச் சம்பளத்திலிருந்து கழித்துச் செலுத்தி வைக்க வேண்டும். இதனோடு கூட ரூபா 3,000 தொகை பெறுமதிக்கு ஒரு நேர்மை காப்பு பிணைப்பத்திரம் கோரப்படும்.

**8 புகைப்படப் பிடிப்பாளர் விரிவு முன்னீட்டாளர்**

சிரேஷ்ட கலவித் தகுதிச் சான்றிதம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் அசைவுள்ளதும், அசைவற்றதுமான புகைப்படக் கருவிகளையும் அதன் முன்னீட்டுக் கருவிச் சாதனங்களையும், இயக்கிப் பரிபாலிப்பதில் குறைந்த பட்சம் 5 வருட கால அனுபவங்கொண்டவராயிருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒரு சேர ரூபா 3,000—10—360 ஆகும்.

**9 சுருக்கெழுத்து அச்டி தட்டெழுத்து—தரம் 2**

சிரேஷ்ட கல்வித்தராதரம், அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும், குறைந்தபட்சம் 3 வருடகால அனுபவங்கொண்டவராயுமிருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் சுருக்கெழுத்தில் நிமிடமொன்றிற்கு 100 சொற்களும், தட்டெழுத்தில் நிமிடமொன்றிற்கு 30 சொற்களும், அல்லது சிங்களத்தில் சுருக்கெழுத்தில் நிமிடமொன்றிற்கு 80 சொற்களும், தட்டெழுத்தில் நிமிடமொன்றிற்கு 25 சொற்களும் கொண்ட தேர்ச்சியிருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்.—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூபா 450—20—550 ஆகும்.

நீண்டகால அனுபவமுள்ளவர்களுக்கும், மிகத் திறமையான தராதரங் கொண்டோருக்கும் ஒரு உயர்ந்த சம்பள விகிதம் அளிப்பதற்குக் கவனம் செலுத்தப்படும்.

**10. அச்சடி தட்டெழுத்தாளர் தரம் 1**

சிரேஷ்ட கல்வித் தராதரச் சான்றிதழ, அல்லது, அதற்குச் சமமான தராதரத்துடன், தட்டெழுத்தில் குறைந்த பட்சம் 5 வருடகால அனுபவங்கொண்டவராயிருத்தல் வேண்டும். வேக விகிதம். ஆங்கிலத்தில் நிமிடமொன்றிற்கு 40 சொற்களும், அல்லது சிங்களத்தில் நிமிட மொன்றிற்கு 35 சொற்களும் கொண்ட தேர்ச்சி பெற்றவராயிருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 375—15—450— ஆகும்.

**11. அச்சடி தட்டெழுத்தாளர் தரம் 2**

சிரேஷ்ட கல்வித் தராதரச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் தட்டெழுத்தில் குறைந்த பட்சம், 3 வருடகால அனுபவமுள்ள வராயிருத்தல் வேண்டும். வேகவிகிதம் : ஆங்கிலத்தில் நிமிட மொன்றிற்கு 30 சொற்களும், அல்லது சிங்களத்தில் நிமிடமொன்றிற்கு 25 சொற்கள் கொண்ட தேர்ச்சியுடையவராயிருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம் : மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 275—15—350— ஆகும்.

சுருக்கெழுத்து-அச்சடித் தட்டெழுத்து, அச்சடித் தட்டெழுத்துப் பதவிகளுக்கு சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் மிகச் சிறந்த தேர்ச்சியும், இயல்பும் தேவைப்படும். குறித்த வேலைக்கு விலையுயர்ந்த "றோட்டா" அச்சடித்தலும் ஏனைய உபகரணங்களும் உபயோகப்படுத்தப் படுவதால், நிரமான செம்மைப்பாடும் சுத்தமும், அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படும். விண்ணப்பதாரர் குறைந்த பணிப்புரையுடன் சிக்கலான படுடோலைகளையும், அட்டவணைகளையும் மற்றும் அவை போன்றவற்றையும் அச்சடி எந்திரத்திற்குள், தட்டெழுத்தக்கப்பட்ட பத்திரங்களையும் நிலைமாற்றி வைக்கக்கூடிய விவேக அறிவுத்திறன் படைத்த தட்டெழுத்தாற்றல் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறுதாகையால், இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கியைய விண்ணப்பித்தனுப்புமாறு, விண்ணப்பதாரர்கள் தயவாய்க் கோரப்படுகிறார்கள். அரசாங்க திணைக்களங்களிலிருந்தோ அல்லது கூட்டுத் தாபனங்களிலிருந்தோ கிடைக்கப் பெறும விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவன அதிபர்கள் குறித்த விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரைத் தடையின்றி விலக்கித் தரமுடியுமென்று தகுந்தவாறு மேலெழுத்துக் குறிப்புச் செய்தனுப்பப்பட்டாலே கவனிக்கப்படும். விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசித் திகதி, 31.10.69 ஆகும். எல்லா விண்ணப்பங்களும் பிரதம நிறுவன உத்தியோகத்தர், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 16, சேர்கோறிஸ் வீதி, கொழும்பு 7 என்று விலாசமிட்டு, பதிவுத் தபாலில், 1969 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 31 ஆந் திகதிபன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, அவருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

நிருவாக அதிபர்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

**மாதிரிப் படிவம்**

.................................................... பதவிக்கு

1. முழுப் பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. வயது : ————.
4. கல்வி-தொழில் தராதரங்கம் : ————.
5. வேலை அனுபவம் : ————.
   (தயவு செய்து அடுத்த தொடர்ச்சியான வேலைகளைப் பற்றி தேதியுடன் விபரங்கள் தருக)
6. தற்போதைய சம்பளம் : ————.
   (அடிப்படைச் சம்பளத்தையும் பிறபடிகளையும் புறம்பாய்க் காட்டுக)
7. எதிர்பார்க்கும் சம்பளம் : ————.
8. விண்ணப்பத்திற்காதாரமாக ஏதாவது விசேஷ தராதரங்கள் : ——

தேதி : ————.

10–704—17–10–69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**சௌக்கிய திணைக்களம்**

**வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர்களைச் சேர்த்தற்கான பரீட்சை**

சௌக்கிய திணைக்களத்தில் இரண்டாந்தர (கிரேட் ) வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர்களாக மெடிக்கல் லபோறற்றரி ரெக்னொலோஜிஸ்ற்)ப் சௌக்கியத் திணைக்களத்தில் இரண்டாந்தர (றேட் ) (வைத்திய ஆய்கூட் நுண்தொழிலாளர்களாக மெடிக்கல் லபோறற்றரி செக்னொலோஜிஸ்ற்)ப் பயிற்சியளித்து நியமிப்பதற்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களை நிரப்பி 1969.11.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கும்படி பதிவுத் தாபால் மூலம் அனுப்பவேண்டும். விண்ணப்பம் கையொப்பமிட்டு நிராகரிக்கப்பட்ட, ரூபா 25 - பெறுமதியான முத்திரைகளைக் கொண்டிருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பங்களை முன்னிட்டும் முத்திரைகளின் பெறுமதி திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. தபாலுறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**2. சம்பள அளவுத்திட்டம்.—(திரட்டிய தொகை)**

(அ) விசேட தரம் வருடாந்தம் ரூபா 8,280—4 — 240—ரூபா 9,240

(ஆ) தரம் ந வருடாந்தம் ரூபா 6,600—8 — 180—ரூபா 8,040 ;

(இ) தரம் நந வருடாந்தம் ரூபா 3,864—18 — 144—ரூபா 6,456; (வினைத்திறமைகாண் தடைகள் சம்பந்தமான விவரங்கள் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்குத் தெரிவிக்கப்படும்).

**குறிப்பு.**—தரம் (I) இல் செய்யப்படும் நிபந்தனைகளின் எண்ணிக்கை ஒருபோதும் தரம் (II) இல் உள்ளவர்களது எண்ணிக்கையின் நாலிலொரு பங்குக்கு மேற்படிமாட்டாது. தரம் (I) க்கான நியமனங்கள் தரம் (II) இல் உள்ள உத்தியோகத்தர்களிலிருந்து சேவை மூப்புப்படியும், சிறப்புத்திறமையைப் பொறுத்தும் செய்யப்படும்.

**3. அலுவல் நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :**

(I) பதவிகள் நிரந்தரமானவையும், இளைப்பாற்றிச் சம்பளம் உள்ளனவுமாகும். அத்துடன் விதவை, அநாதர் இளைப்பாற்றிச் சம்பளத்திட்டத்துக்கு உதவு தொகையும் கழிக்கப்படும் ;

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இரண்டு வருட காலத்துக்குப் பயிற்சி பெற வேண்டுமெனக் கோரப்படுவர். முதலாம் வருடத்தில் நோயியல் இரசாயனம், நுன் அனுவுயிரியல், இரத்தவியல், இரத்தவங்கி இரத்த நீர் மூலமான நோய் நிர்ணய சிகிச்சை இயல், ஒட்டுண்ணியியல், பூச்சியியல், இழையநோயியல் ஆய்கூட நிர்வாகப் என்பனபற்றிய போதனைகளும், செய்முறைப் படிப்பும் இடம்பெறும். இரண்டாம் வருடம் முழுவதும் செய்படிப்பும் இடம்பெறும். இரண்டாம் வருடம் முழுவதும் செய்முறை வேலைகளைத் தாமாகவே செய்து பழகும் காலமாக இருக்கும். இரண்டாம் வருட முடிவில் ஓர் பரீட்சை நடாத்தப்படும். இப் பரீட்சையிற் சித்தியெய்தத் தவறும் அபேட்சகர்களுக்கு பரீட்சகர்கள் சபையால் சிபார்சு செய்யப்படுவதற்கிணங்க ஆறுமாத காலத்துள் மேலும் இரண்டு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்தின்போது வேலையிலும், நடத்தையிலும் திருப்தியளிக்காத அபேட்சகர்கள் இடை நிறுத்தப்படுவதற்குப் பாத்திரராவர் அல்லது சௌக்கியசேவை அதிபதியின் விருப்பப்படி அவர் களது பயிற்சிக்காலம் ஆறுமாதங்களுக்கு மேற்படாத காலம்வரை நீடிக்கப்படக்கூடும். இரண்டுவருடப் பயிற்சி வகுப்பைச் சித்திகரமாக முடிப்பவர்களுக்கு வைத்திய ஆய்கூடத் தொழில் நுட்பவியலில் தேர்ச்சிபெற்ற சான்றிதழொன்று வழங்கப்படும். அத்துடன், காலித்தானங்கள் ஏற்படுவதற்குத் தக்கபடி அவர்கள் மூன்று வருடத் தகுதிகாண் நிலையில் வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர், தரம் ( ) இல் நியமனம் அளிக்கப்பெறுவர். ;

(III) அபேட்சகர்களின் சேவை மூப்பு அல்லது முதுமுறை இரண்டாம் வருடமுடிவில் நடைபெறும் பரீட்சைப் பெறுபேறுகளைக்கொண்டு தீர்மானிக்கப்படும். அத்துடன் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பயிற்சிக் காலம் நீடிக்கப்பெற்ற அபேட்சகர்கள் சேவையில் ஏனையோருக்கு இளையவர்களாக அமைவர்.

(IV) பயிற்சிக் காலத்தில் முதலாம் வருடம் 3,000 – ரூபாவும், இரண்டாம் வருடம் 3,144 – ரூபாவும் உதவிப் பணமாகக் கொடுக்கப்படும் ;

(V) பயிற்சிக்கு அனுமதிக்கப்படும் அபேட்சகர்கள் பயிற்சி வகுப்பில் சேர்ந்த திகதி யிலிருந்து ஏழு வருட காலத்துக்குச் சௌக்கியத் திணைக்களத்திற் சேவை செய்வதென்று ஒரு உடன்படிக்கை செய்வதுடன் பிணை நிற்பவர்களுடன் ஒரு பிணையிலும் கைச்சாத்திடவேண்டுமென்று கேட்கப்படுவர். இந்த உடன்பாட்டை இடையில் மீறுபவர்கள் பயிற்சிக் காலத்தில் சம்பளமாகவும், உதவிப் பணங்களாகவும் பெற்ற சகல பணங்களாகவும் பெற்ற சகல பணங்களையும் திருப்பிச் செலுத்தவேண்டும். ;

(VI) ஆய்கூட உப—எதவியாளர்கள் தரத்திலும், வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர் களின் ( ) ஆந் தரத்திலுமிருந்து திரட்டப்பட்ட அபேட்சகர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் பதில் நியமனங்

கள் வழங்கப்படும். அவர்கள் மேலே பந்தி (3) இல் குறிக்கப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியெய்தும் திகதியிலிருந்து நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுவர். அப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறினால் அவர்களை முன்பு இருந்த தரத்துக்கு மாற்றிவிட நேரிடும்.

(VII) வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர்கள் ஏழு நாட்களும் வேலை செய்யவேண்டியவர் வர்களாதலால், போயா நாட்களும், பொது விடுமுறை நாட்களும் உட்பட வாரத்தில் 7 நாட்களிலும் கடமைக்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். மேலும் வாரத்தின் 7 நாள்களிலும் பகலில், அல்லது இரவில் எந்நேரத்திலும் அவர்கள் கடமைக்கு அழைக்கப்படுவர். அவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவைசெய்வதற்குக் கடமைப் பட்டவர்களுமாவர்.

(VIII) நியமிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைப் பயன்படுத்துவதற்கும், குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் இதுவரை உண்டாக்கப்பட்ட அல்லது இனிமேல் உண்டாக்கப்படக்கூடிய எந்தப் பிரமாணங்களுக்கும் இசைந்து நடக்கவேண்டுமெனக் கேட்கப்படுவர்.

(IX) நியமிக்கப்பட்டவர்கள் தகுதிகாண் பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சிபெற வேண்டும். திறமைகாண் பரீட்சார்த்த காலத்தின் முடிவில் அவர்களை உறுதிப்படுத்தும் விடயம் ஏனை தகுதிகளுடன் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைவதிற் தங்கியிருக்கும். ;

(X) தங்கள் தகுதிகான் பரீட்சார்த்த காலத்தில் சிங்கள ,மொழியில் விதிக்கப்பட்ட தரத்தில் தேர்ச்சிபெறத் தவறுவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படப் பாலதிராவர் ;

(XI) அரசாங்க சேவையில் சேர்வதற்குச் சிங்கள மொழி மூலம் தகுதி பெற்ற வர்கள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையை எடுக்கவேண்டிய தில்லை.

குறிப்பு.—(அ) வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர் சேவையில் நியமிக்கப்படும் போது முன் சேர்ந்தவர்களாக (ஓல்ட் என்றன்ஸ்) கருதப்படுவோர் உப–பந்திகள் (VIII), (IX), (X) என்பவற்றின் தேவை களிலிருந்து விதி விலக்குப் பெறுவார்கள்,

(ஆ) 24.9.56 உக்கு முந்திய ஒரு திகதியிலிருந்து நிரந்தரமான நியமனங்களைக் கொண்டவர்களாக உள்ள ஆய்கூட உப உதவியாளர்களும், வைத்திய ஆய்கூட நுண் தொழிலாளர்களின் (III) ஆந் தரத்தைச் சேர்ந்தவர்களும், வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர்களின (II) ஆந் தரத்துக்கு நியமிக்கப்படத் தேர்ந்தெடுக்கப் பட்டால், அரசகரும மொழிக்கொள்கை நோக்கங்களுக்கு அவர்கள் முன் சேர்ந்த வர்களாக கருதப்படுவர்.

4. தேவையான தகைமைகள் :

(அ) ஒவ்வொரு ஆண் பெண் விண்ணப்பகாரரும், தான்.—

(அ) 1969.11.17 ஆந் திகதியன்று 17 வயதுக்குக் குறையாதவரென்றும், 25 வயதுக்கு மேற்படாதவரென்றும் ;

(ஆ) (I) இரசாயனவியலிலும், (பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், உயிரினவியல் என்பவற்றுள் ஒன்றிலும் திறமைச் சித்திகளுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சுத்தியடைந்துள்ளாரென்றும் ; (பின்னர் எடுத்த சி. பா. த. ப. பரீட்சையொன்றில் அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சையொன்றில் எத்தடவையிலேனும் திறமைச்சித்திகளைப் பெற்றிருத்தல் போதுமானது.)

(II) இலங்கைக் கல்விப் பொதுத் தகுதிப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம் அல்லது தமிழ்ப்பாஷை, கணிதம் (மதமற்றிக்ஸ்) என்பவற்றுடன் பௌதிக வியல், தாவரவியல், விலங்கியல், உயிரின வியல் என்பவற்றுள் ஒன்றிலும் இரசாயனவியலிலும் (கிறெடிற் பாஸ்) திறமைச் சித்திகள் அடங்கலாக வேறு நான்கு பாடங்களிலும் சித்தியடைந்துள்ளாரென்றும் ;

அல்லது

(III) சௌக்கியத் திணைக்கள ஆய்கூட உப–உதவியாளர் வன்றேல் (III) ஆந் தரவைத்திய ஆய்கூட நுண்தொழிலாளரென்றும் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியெய்தியுள்ளாரென்றும், 3 வருடங்கள் திருப்திகரமாகச் சேவை செய்துள்ளாரென்றும் ;

அல்லது

(IV) சௌக்கியத் திணைக்களத்தின் (III) ஆந் தர வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளரென்றும், (III) ஆந் தர வைத்திய நுண் தொழிலாளராக 5 வருடங்கள் திருப்திகமாகச் சேவைசெய்து முடித்தவரென்றும் ;

திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. பரீட்சைக்கு அனுமதித்தல்.

பிரவேசச் சீட்டுக்களை அபேட்சகர்கள் என்னிடமிருந்து பெறுவர். அவை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கொடுக்கப்பட வேண்டும். பிரவேசச் சீட்டுகளைச் சமர்ப்பிக்காத அபேட்சகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஒரு விண்ணப்பகாரர் பரீட்சைத் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் தனது பிரவேசச் சீட்டைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அவர் கீழ்க்காணும் விலாசத்துக்கு இதன்கீழ் உள்ள தகவல்களைக்கொண்ட ஒரு தந்தியை உடனடியாக அனுப்ப வேண்டும்.—

டிறெக் ஹெல்த்,
தபாற்பெட்டி 500,
செக்ரெட்டேரியட்,
கொழும்பு.

(1) பரீட்சைப் பெயர் :—

(2) விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :—

(3) முழு விலாசம் :—

(4) விண்ணப்பத்தை வைத்து அனுப்பிய பதிவுத் தபால் இலக்கமும் தபால் அலுவலகத்தின் பெயரும் :—

6. தேர்வு முறை.

பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படவுள்ள ஒரு போட்டிப் பரீட்சையின் பெறு பேறுகளின்படி இப்பயிற்சிக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படுவர் பரீட்சைகளை நடாத்துவதற்புகுப் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் பிரமாணங்களுக்கு அபேட்சகர்கள் கட்டுப்படுதல் வேண்டும். இப்பரீட்சை 1969 ஆகஸ்ட் 11 ஆ11ஆந் திகதியன்று கொழும்பில் நடைபெறும்.

விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் உரிய கட்டணத்துடன் விண்ணப்பஞ் செய்யும் சகல அபேட்சகர்களும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதைத் தகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டதாகச் கருதக்கூடாது. நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் சாதனங்களின் மூலம் பிரகுச் சமர்ப்பிப்பதன் மூலம் அபேட்சகர்கள் தமது தகுதியை நிரூபிக்கும்படி கோரப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கவனிக்க :— ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). பிறப்புப் பதிவு செய்யப்படாத விண்ணப்பகாரரின் விடயத்தில், பதிவாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட ஒரு விசேட வயதுச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப் படும்.

(ஆ) பெற்றுள்ள உயர்கல்வித்தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

(இ) விண்ணப்பகாரரின் தகைமையையும். பதவிக்கு நியமிக்கப்படுதற்கான தகுதியையும் குறிப்பிடுவனவாக அண்மையில் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்கள் இந்த உப– பிரிவின் பிரகாரம் நற்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.)

இவற்றின் மூலப் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பக் கூடாது.

7. பரீட்சைத்திட்டம்.

| பரீட்சைக்காய பாடங்கள் பின்வருமாறு :— | புள்ளிகள் |
|---|---|
| பாஷையும் வியாசமும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஒரு மணிநேரம் | 50 |
| இரசாயனவியல் (சிங்களம் தமிழ் ஆங்கிலம் இரண்டு மணிநேரம் .. | 100 |
| பௌதிகவியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது உயிரினவியல் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்) ஒரு மணிநேரம் .. | 50 |
| பொது விவேகம் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்) அரை மணிநேரம் .. .. | 50 |

குறிப்பு : விஞ்ஞான பாடங்களுக்கான திட்டங்கள் கல்விப் பொதுத்தார தரப்பத்திர (சாதாரணதர)ப்பரீட்சைக்குரிய பாடத்திட்டங்களாக இருக்கும்.

நேரசூசி

பரீட்சைத் திகதி 19670 ஜனவரி 29 ந் திகதி

மு. ப. 9.00– மு. ப. 10.00 வரை பாஷையும் வியாசமும் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்)

மு. ப. 10. 15.– மு. ப. 11.15 வரை பௌதிகவியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது உயிரினவியல் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்)

மு. ப. 11.30 நண்பகல் 12. 00 வரை பொது விவேகம் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்)

பி. ப. 1.00 பி. ப. 3.00 வரை இரசாயனவியல் (சிங்களம் தமிழ் ஆங்கிலம்)

8. பரீட்சை எழுதும் மொழி.

அபேட்சகர்கள் இப்பரீட்சைக்கு அனுமதிபெற அவர்களுக்குத் தகைமை அளிக்கும் பரீட்சையில் சித்தியெய்திய அதே மொழியில் இப்பரீட்சையை எழுதலாம். அதாவது சிங்களத்தில் தமிழ் ஆங்கிலத்தில் —ஆனல்.—

(அ) தகைமைப் பரீட்சையில் வெவ்வேறு பாடங்களை வெவ்வெறு மொழிகளில் எழுதிச் சத்தியெய்திய அபேட்சகர்கள் இப்பரீட்சையில் அதே பாடங்களை அதே மொழிகளிலும், ஏனைய பாடங்களைப் பாஷையும், வியாசமும் எனும் (1) ஆம் பாடத்தை எழுதும் மொழியினுலும் எழுத வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகளைக் கவனியாது இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுபவர்களும், பந்தி 4 இல் குறிக்கப்பட்ட தகைமைப் பரீட்சையில் சித்தியடையாதவர்களுமாக சௌக்கியத் திணைக்களத்தில் ஏற்கெனவே சேவையில் உள்ள அபேட்சகர்கள் தாம் கல்வி பயிற்றப்பட்ட மொழியில் இப்பரீட்சைப் பாடங்களுக்கு விடையெழுத வேண்டும்.

இ() தமிழ் அன்றேல் மொழியில் தகைமைப் பரீட்சையிற் சித்தியெய்திய அபேற்ட்சகர்கள் அல்லது தமிழ் அன்றேல் ஆங்கில மொழிச மூலம் கல்வி புகட்டப்பட்ட அபேட்சகர்கள் விரும்பினு; இப்பரீட்சைப் பாடங்களுக்குச் சிங்பகள மொழியில் விடை எழுதலாம்.

9. அடையாளச் சீட்டுக்கள்.—பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்திப்படும்படி தமது ஆளடையாளத்தை நிரூபிக்கவேண்டுமென அபேட்சகர்கள் கோரப்படுவர். இதன்பொருட்டு பின்வரும் சாதனங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தபாற்கந்தோர்த் தலைமை அதிபதி (போஸ்ற்மாஸ்டர் ஜெனரல்) வழங்கிய அடையாளச்சீட்டு ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு முந்திய 3 வருடங்களுள் வழங்கப்பட்ட ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்) ;

(இ அரசாங்கத் திணைக்களமொன்றின் அதிகாரத்துடன் பரீட்சைத் திகதிக்கு முந்திய 3 வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருக்கும் அபேட்சகரின் புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவது சான்றிதழ் அல்லது அனுமதிச்சீட்டு (லைசென்ஸ்) அல்லது வேறு சாதனம்.

10. எழுத்துப் பரீட்சையில் ஒரு திருப்திகரமான தரத்தையடையும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர். அப்பரீட்சைக்கான திகதி, நேரம், இடம் என்பன பின்னர் தெரிவிக்கப்படும். இந்த நேர்முகப் பரீட்சை சம்பந்தமாக அபேட்சகர்களுக்குத் தனித்தனியாக அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சை சௌக்கிய சேவை அதிபதி நியமிக்கும் ஒரு சபையால் நடாத்தப்படும். இதற்கு வருவதற்கான பயணச் செலவுகளோ, வேறு செலவுகளோ அபேட்சகர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது.

11. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளும் சௌக்கிய சேவை அதிபதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இந்தத் திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தரதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக் கூடாது.

12. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி 1, தொகுதி 11 இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்கசேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. பி. எ. பெரோரா,
பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
சௌக்கியசேவை அதிபதிக்காக.

எசளக்கியசேவை அதிபதி அலுவலகம்,
தபாற்பெட்டி 500, கொழும்பு 1.
1969 ம் ஆண்டு மீ 7 ந உ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

II ஆந்தர, வைத்திய ஆய்கூட நுண்தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) குடும்பப்பெயரை முதலாவதாகக்கொண்ட முழுப் பெயர் : ————.

(ஆ) தபால் விலாசம் : ————.

2. (அ) 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ந் திகதியன்று சரியான வயது : ————.

வருடங்கள் : ————. மாதங்கள் : ————. நாட்கள் : ————.

(ஆ) பிறந்த திகதியும், இடமும் : ————.

(இ) ஆணு பெண்ணு : ————.

3. தேசீய இனம் : ————.

4. விவாகமானவா ? தனித்தவரா : : ————.

5. இப்போட்டிப் பரிட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைபெறச் சித்தியெய்திய பரீட்சையின் பெயரை, அப்பரீட்சைத் திகதி, சுட்டிலக்கம், பரீட்சை நிலையம், சித்தியெய்திய பாடங்கள் என்பவற்றுடன் குறிப்பிடுக : ————.

6. பாடசாலையை விட்டபின் பார்த்த தொழில்கள் : ————.

7. ஏதாவது பயிற்சி, தகைமைகள் அல்லது அனுபவம் இருந்தால் விபரங்கள் : ————.

8. அபேட்சகர் பரீட்சிக்கப்பட விரும்பும் மொழிமூலம் : ————.

(அ) பாஷையும், வியாசமும் : ————.

(ஆ) இரசாயனவியல் : ————.

(இ) பௌதிகவியல், அல்லது தாவரவியல், அல்லது விலங்கியல், அல்லது உயிரினவியல் (இவற்றில் நீர் எதை எடுக்கிறீர் என்பதையும் குறிப்பிடுக) : ————.

(ஈ) பொது விவேகம் : ————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் உண்மையானவையும், சரியான வையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறுனதென்றோ தேர்வுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமைநீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்துக்குப்பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

| 25 ரூபா முத்திரை |
|---|

(அபேட்சகர் முத்திரையில் கையொப்பமிட வேண்டும்).

திகதி : ————.

10-667—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.

# விண்ணப்பப்பத்திர அறிவித்தல்கள்

இலங்கை அரச விமானப் படையின் ஏகல தளத்தில் விவாகமான விமானப்படை வீரருககு ஒரு மனை கட்டுதற்கான விண்ணப்பங்கள்

திருத்தம்

1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை நிர் . . . .யின் பகுதி I தொகுதி II இல் முதலாம் பந்தி பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச விமானப்படையின் ஏகல தளத்தின் விவாகமான விமானப்படை வீரருக்கு ஒரு மனை கட்டுதற்கான விண்ணப்பங்கள் கொழும்பு த. பெ. 594 ஐக்கொண்ட அரச விமானப்படைத்தலைமை நிலையத்துளுள்ள கேள்விச் சபைத்தலைவரால் 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எம். எஸ். மாறுப்,
ஸ்ரொட்சன் லீடர் விமானப்படை
விமானப்படை ஒவுநந்தாக.

10-662—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.——

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள கிரித்தலைத் திட்டத்தில் ஆசிரியர் குடிமனை முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

குடிமனை முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் 2 ஆசிரியர் குடிமனைகள், 1 நீர்த்தாங்கி, 1 கிணறு (8 அடி விட்ட முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்களை க் காணி அபிவிருத்தி அதிபர் 1969 ம் ஆண்டு 11 ம் மாதம் 14 ந் திகதி மு. ப. 11.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 – கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க்வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு 11 ம் மாதம் 13 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக் கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப்பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் கிரித்தலைத் திட்டத்தில் ஆசிரியர் குடிமனைகள் முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப் பத்திரம் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அக்கிராசனர், கேள்விச்சபை, காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேளவிப்பத்திரங்கள் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப்பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ஆண்டு நொவெம்பர் மாதம் 14 ம் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 50,000 – ரூபாவுக்கு பொதுவேலைத் திணைக்களம் நீர்ப்பாசன கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களாக இருக்க வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்கவேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின்கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது மாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1.
1969 ம் ஆண்டு மீ 8 ந உ.

10–680—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வடமுனைத் திட்டத்தில் குடியேற்ற அலுவலர் இல்லம் முதலியன நிருமானிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வடமுனைத் திட்டத்தில் குடியேற்ற அலுவலர் இல்லம் முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் 1 குடியெற்ற அலுவலர் இல்லம், 1 குடியேற்ற அலுவலர் அலுவலகம், 1 ஓவசியர் இல்லம் 1 கிணறு முதலியவற்றை மேற்கூறப்பட்டதிட்டத்தில் நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1969 ம் ஆண்டு 11 ம் மாதம் 7 ந் திகதி மு. ப. 11.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50–கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்)யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு 11 ம் மாதம் 6 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு–1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விக் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக் கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின், கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " வடமுனைத் திட்டத்தில் குடியேற்ற அலுவலர் இல்லம் முதலியன நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரம் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு–1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப் பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வை ப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அ சாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு–1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ஆண்டு நொவெம்பர் மாதம் 7 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 50,000- ரூபாவுக்கு பொதுவேலைத் திணைக்களம்-நீர்ப்பாசன-கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக் களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப் படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலைநடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலி யாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங் கத்திற்கு ஆட்டேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறி யியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆடு ஒற்றோபர் மீ 8 ந வ.
ஓரீ-2-395

10–675 17–10–69 ந் திகதிய வர்த்தமானி.இல

---

## " மைலவ் " மோட்டார்ப் படகு விற்பனை

கொழும்புத் துறைமுகத்தில் இருக்கும் " மைலவ் " என்னும் பெயர் கொண்ட மோட்டார் படகு வாங்குவதற்கு சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. படகு விவரம் வருமாறு :

படகு விளக்கம் : துறைமுகங்களிலும் பாதுகாப்பான நீர் நிலையங் களிலும் பொதுப் பாவனைக்கேற்ற பைவர் கிளாஸினாலான படகு.

பரிமாணம் : 15"—0"—5"—6"—2"—6"

மோட்டார் : 40 பரிவலு எவின்றுாட் றிமோட் கொன்றோல்.

கொழும்புத் துறைமுகத்தில் படகு சோதிக்கப்படலாம். சோதிக்க விரும்புவோர் எலிஸபெத் இராணி இறங்குதுறை, கொழும்பு 1 ல் உள்ள வர்த்தக கப்பற் சேவைத் திணைக்களத்தின் கப்பற் சேவைத் தலை வருக்கு (ஷிப்பிங் மாஸ்டர்) விண்ணப்பிக்க வேண்டும்.

2. " சுங்க மாளிகை " கொழும்பு–1 ல் உள்ள கப்பற் சேத பரி பாலன அதிகாரியின் அலுவலகத்தில் 31.10.69 ம் திகதி பிற்பகல் 2 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

31.10.69 ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு–1 ல் உள்ள கப்பற் சேத பரிபாலன அதிகாரியின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விப் பத்திரங்களை அனுப்பியோர் சமூக மாயிருக்கலாம்.

3. 26.10.69 ம் திகதி பிற்பகல் 2 மணி வரை கப்பற் சேவைத் தலைவர் (ஷிப்பிங் மாஸ்டர்) அலுவலகத்தில் கிடைக்கப்பெறும்படி வங்கிகளில் கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கப்பற் சேவைத் தலைவர் (ஷிப்பிங் மாஸ்டர்) அலுவலகத்தில் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 100 கட்டி அதற்குரிய பற்றுச் சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும். விற்பனை திருப்தி கரமாய் பூர்த்தி அடைந்தவுடன் கேள்விப்பத்திர வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் புரியக்கூடியதாக எழு தப்படும் திருத்தங்கள் கை ஒப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

4. " சுங்க மாளிகை " கொழும்பு–1 ல் உள்ள கப்பற் சேத பரிபாலன அதிகாரியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப் பத்திரங்கள் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் உறையிலிடப் பட்டு அவ்வுறையின் இடதுபுற மேல் மூலையில் " மைலவ் மோட்டார்ப் படகு வாங்குவதற்கான கேள்வி " எனக் குறிப்பிட்டு கப்பற் சேத பரி பாலன அதிகாரிக்கு முகவரியிடப்பட்டிருக்க வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் அவரால் கேட்கப்பட்ட தொகை யுடன் ரூபா 1,000 சுங்க வரியாகச் செலுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்ட கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறி விப்புக் கிடைத்த ஒரு கிழமைக்குள் முழுப் பணத்தையும் செலுத்திப் படகை உரிமை எடுத்துக் கொள்ளல் வேண்டும். தவறின் வைப்புப்பணம் இழப்பர். கப்பற் சேத பரிபாலன அதிகாரியின் விருப்புக்கமைய படகும் திரும்பவிற்கப்படும்.

6. எந்த ஒரு அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் ஒரு காரண மும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை கப்பற் சேதபரிபாலன அதிகாரி உடையர்.

ஏ. ஈ. பண்டிதரட்ண,
கப்பற் சேத பரிபாலன அதிகாரி.

வர்த்தக கப்பற் சேவைத் திணைக்களம்,
எலிஸபெத் இராணி இறங்குதுறை,
கொழும்பு–1.

10–687—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.

---

எனது இல. இப 260 (69 70)

## காலிக் கச்சேரி—கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலிக் கச்சேரி—கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல் காலி மாவட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள அமைப்பு வேலைக்காக 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு (த. பெ. 500) காணிக் கொமிசனர் திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் அங்கு சமூக மாயிருக்கலாம். கொழும்பு, காலிமுகத்தில் அமைந்துள்ள செகரடேரியட் கட்டிடத்தின் 3 ஆம் மாடியிலுள்ள காணிக் கொமிசனர் காரியாலய 357 ஆம் இலக்க அறையில் கேள்வி ப்பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந் பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களிலேயே இணைப் பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலை சம்பந்தமான திட்டத்தை மேற்படி கச்சேரியில் பார்த் க் கொள்ளக்கூடியதாயுள்ள டன் அதனையிட்ட முழு விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ் வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள, அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு ஒப்பந்த வேலைகளுக்காக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனிப்பட்டவர்கள், அரசாங்க வேலை, நீர்ப்பாசனம், கல்வி, அல்லது வேறு திணைக்களங்கள் அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள, அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, இவ்வித வேலைகளைத் திறமையாகச் செய்து முடிப்பதற்குத் தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபி விருத்திச் சங்கங்களும் இவ்வேலைகளுக்காகக் கேள்விப் பத்திரங்களை அனுப்பலாம். அதற்கு மேலே குறிப்பிடப்பட்ட அரசாங்க அதிபருக்கு அவ்வாறு பதிவு பெற்றிருத்தலையும் திறமைபற்றிய திறமையையும் குறித்து ரூபா 100 – ஐ வைப்புப் பணமாக வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விக்கான பத்திரங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் வைப்புப் பணம் வைக்கத் தேவையில்லை. ஆனால் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட தமது திறமைபற்றிய அத்தாட்சியையும் சமர்பித்தல் வேண்டும்.

4. கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " உடவெளிவிட்டிய உயர் பூமிக் குடியேற்றப் பிரவேசப் பாதைக்கு மதகு அமைத்தல் சம்பந்தமான கேள்விப் பத்திரம் " எனக் குறிப்பிட வேண்டியதுடன் எல்லாக் கேள்விப் பத்திரங்களினும் கையெழுத்திட்ட முத்திரை (சீல்) வைத்துப் பாதுகாப்பாக அனுப்புதல் வேண்டும்.

டப்ளிவ். எல். ஆர். பி. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

1969 ம் ஆடு மீ 6 ந வ.
கச்சேரி, காலி.

அட்டவணை

| வேலைவிபரம் | அமைந்துள்ள இடம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. உடவெளிவிட்டிய உயர்பூமிக் குடியேற்றப் பிரவேசப் பாதைக்கு மதகு அமைத்தல் | உறினிதும் பத்து.. | |

10-964—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.

என்து இல. இப 260 (69 70)

## காலிக் கச்சேரி—கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்காக 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை காலி அரசாங்க அதிபரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்று குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வமயம் கேள்விக்காரர்கள் அங்கு அங்கு சமுகமாமாயிருக்கலாம். காலி உதவி அரசாங்க அதிபரின் அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பத்திரங்களில் இணைப்பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமான திட்டத்தை மேற்படி கச்சேரியில் பார்வையிடக்கூடியதாயுள்ளதுடன் அதனையிட்ட முழு விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள, அல்லது அதற்குக் கூடிய தொகைக்கு ஒப்பந்த வேலைகளுக்கு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், அரசாங்க வேலை, நீர்ப்பா சனம், கல்வி அல்லது வேறு திணைக்களஙகல் அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக்கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள இவ்விதமான வேலைகளில் அனுபவமும் திறமையுங்கொண்ட கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலைகளுக்காகக் கேள்விப் பத்திரங்களை அனுப்பலாம். அதனை மேற்படி அரசாங்க அதிபருக்கு அவ்வாறு பதிவு பெற்றிருத்தலையும் திறமையையும் குறித்து ரூபா 100 – ஐ கேள்வி வைப்புப் பணமாக வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆந் திகதி பிறபகல் 3.00 மணிவரை கேள்விக்கான பத்திரங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கேள்வி வைப்புப் பணம் வைக்கத் தேவையில்லை. ஆனால் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட திறமை சம்பந்தமான அத்தாட்சியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "....................................க்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட வேண்டியதுடன் எல்லாக் கேள்விப் பத்திரங்களிலுல் கையெழுத்திட்டு முத்திரையிட்டு (சீல்) பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டப்லிவ். எல். ஆர். பி. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

1969 ம் ஆம் ஒக்டோபர் மீ 7 ந் உ.
கச்சேரி, காலி.

அட்டவணை

| வேலைவிபரம் | அமைந்துள்ள இடம் | பதிவுபெற்றிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. உடவெலிவட்டிய உயர் பூமிக் குடியேற்றத்துக்கு பிரவேசப் பாதை (ஒரு பகுதி) | ஷ .. | 15,000 – |
| 2. உடவெலிவிட்டிய உயர்பூமிக் குடியேற்றத்துக்குக் குழாய் நீர் விநியோகத் திட்டம் | ஷ .. | 15,000 – |
| 3. ஒபாத்த வீரபாண 2 வ்துமைல் பழுது பார்த்தல் | ஷ .. | 15,000 – |

10–693—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.

---

## இலங்கைப் போக்குவரத்து சபை

கொழும்பு–5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை பொரலஸ்கமுவை வெரகெரையிலுள்ள விற்றுத் ர்க்கும் இ. போ. ச. வளவில் இருந்து சுத்தமானதும், நிறம் பூசியதுமான அலுமினியக் கழிவுகளைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதான கழிவுகளின் அளவுகள் கிட்டத்தட்ட பின்வருமாறு :—

(அ) சுத்தமான அலுமினிய வெட்டுத்துண்டுகள்—19 தொன், 08 அந்தர் ;

(ஆ) நிறம் பூசிய அலுமினியம்—25 தொன், 08 அந்தர்.

எனினும் வாங்குவதற்கு உத்தேசித்துள்ளவர்கள் தங்களுடைய தேவைகளுக்கேற்றதாக குறைந்த அல்லது கூடிய தொகைகளுக்கு அந்தர் வீதமே கேள்வியிடவேண்டுமென அறிவிக்கப்படுகின்றனர்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக, சிறிய தொகைகளுக்கு 1 தொன் அலுமினியம் வரை ரூபா 100 – ஐயும், கழிவுகளின் முழுத் தொகைகளுக்கும் ஆகக்கூடிய கட்டுப்பணமாக ரூபா 1,000 – ஐயும் காசாக கொழும்பு–5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி அதன் பற்றுச்சீட்டுக்களைக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்பு எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

பொரலஸ்கமுவை வெரகெரையிலுள்ள விற்றுத் ர்க்கும் வளவில், வழமையான அலுவலக நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம விணியோக உத்தியோகத்தர்.

விணியோகப் பகுதி,
200, கிருல வீதி,
கொழும்பு–5.

10–720

---

## கமத்தொழிற் சேவை இலாகா

### தானியக் களஞ்சியங்கள் கட்டுவதற்கான கேள்விகள்

தானியக் களஞ்சியங்கள் கட்டுவதற்கான கேள்விகள் 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை இலாகாவில் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் திகதி வெள்ளிக்கிழமை பிறபகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். நிலைய விபரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம் | குறிப்பிடம் | கட்டிடத்தின் தொகை |
|---|---|---|
| மட்டக்களப்பு .. | கோக்கடிச்சோலை .. | ஒன்று (1) கட்டிடம் |
| மட்டக்களப்பு .. | வ்வுனத்தீவு .. | ஒன்று (1) கட்டிடம் |

2. கேள்விகள் கட்டுப்பணமாக ரூபா 250 – (இருநூற்று ஐம்பது) இரு நிலையங்களுக்கும் தனித்தனியாக 60 , கோட்டன் இடம், கொழும்பு 7 இல் உள்ள கணக்காளரிடம் கட்டவேண்டும். அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள வேறு எந்தக் கச்சேரியிலோ கட்டி பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவ்வ ஆணையாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அவை இருபிரதிகளில் இயூக்க வேண்டும்.

3. ரூபா 30,000 – அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். அவர்கள் தங்கள் "பதிவுப் புத்தகத்தைக் காட்டி" படிவங்களை 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் திகதி பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பம் செய்வோர் தமது விண்ணப்பம் எனக்கு குறித்த கால எல்லைக்குக் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழுவபு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வி. சி. நவரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

கமத்தொழிற் சேவை இலாகா,
42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ம் திகதி.

10–599–1

**கமத்தொழிற் சேவை இலாகா**
**தானியக் களஞ்சியங்கள் கட்டுவதற்கான கேள்விகள்**

தானியக் களஞ்சியங்கள் கட்டுவதற்கான கேள்விகள் 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7, இல் உள்ள கமத்தொழிற் சேவை இலாகாவில் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நிலைய விபரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம் | குறிப்பிடம் | கட்டிடத்தின் தொகை |
|---|---|---|
| திருக்கோணமலை.. | மான்குளம் | .. ஒன்று (1) கட்டிடம் |

2. கேள்விகள் கட்டுப்பணமாக ரூபா 250 – (இருநூற்றி ஐம்பது) ரூ 60, கோட்டன் இடம், கொழும்பு 7 இல் உள்ள கணக்காளரிடம் கட்ட வேண்டும். அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள வேறு எந்தக் கச்சேரியிலோ கட்டி பற்றுச்சீட்டைத் சமர்ப்பித்து 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழில் சேவை ஆணையாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அவை இருபிரதிகளில் இருக்கவேண்டும்.

3. ரூபா 30,000 – அல்லது மேற்பட்ட தொகையில் அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். அவர்கள் தங்கள் "பதிவுத் புத்த கத்தைக் காட்டி" படிவங்களை 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் திகதி பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பம் செய்வோர் தமது விண்ணப்பம் எனக்கு குறித்த கால எல்லைக்குக் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

4. 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வி. தி. நவரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

கமத்தொழிற் சேவை இலாகா,
42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி,
கொழும்பு 7,
1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி.

10–599–2

---

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அரசாங்கக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு விஸ்தரிப்பதற்கு, முன்னேற்றுவதற்கான கேள்விப் பத்திர அறிவிப்பு

நடப்பு வருடத்திற்கான மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் இரத்தினபுரி அரசாங்க அதிபதினுல் 2 ந் திகதி நவம்பர், 1969 மத்தியானம் 12.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும் ரூபா 25,000 க்கு மேற்பட்ட அரசாங்க கொந்தராத்துப் பதிவுகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக் கட்டணமாக ரூபா 25.00 இக்கச்சேரியிற் கட்டியோருக்கு 31 ஆம் திகதி ஒக்டோபர் மாதம், 1969 ஆம் ஆண்டு பி. ப. 4.30 மணிவரையும் இக் கந்தோரிலிருந்து கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட தபாலில், மேலுறையின் இடது பக்கத்திற் தெளிவாக " அரசாங்கக் கட்டி உங்களின் பராமரிப்பிற் கான கேள்விப் பத்திரம் " என எழுதப்பட்டு அரசாங்க அதிபடுக்கு அனுப் பப்பிடல் வேண்டும் அல்லது கச்சேரியிலுள்ள " கேள்விப் பத்திரப் பெட்டி யிற் போடப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 2 ஆந் திகதி நலம்பர் மாதம் மத்தியானம் 12.00 மணிக்கு முடிவடையும்.

எம். செல்லத்தம்பு,
அரசாங்க அதிபடுக்காக.

கச்சேரி,
இரத்தினபுரி, ஒக்டோபர், 1969.

10–660—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.——.

---

நீர்ப்பாசன திணைக்களம்—புத்தளம் உப பிரிவு

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் வட மேல் பகுதி பெரும் பாகம் நீர்ப்பாசனப் பொறியியலாளரால் அவரின் குருநாகல் அலுவலகத் தில் 4.11.69 முற்பகல் 10.00 மணிவரையும் பெற்று உடனே பிறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை ரூ. | கேள்விக் கட்டணம் ரூ. | மார்ச்சு வேலை விகிதம் |
|---|---|---|---|
| (1) மகா அந்தரவேவா திருத்துதல் .. | 35,000 .. | 50 0 .. | 20— |

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் மேலே கூறப்பட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவு சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப்பத்திரங் கள் சமர்ப்பிக்கத் தருவியுடையவராவர்.

3. இக் கேள்விக்குரிய பத்திரங்கள் நீர்ப்பாசன அலுவலகம் புத்தளம், நீக்கவரட்டியா, ஆகிய இடங்களில் அலுவலக நேரங்களில் 19.10.69 தொடக்கம் 30.10.69 வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாள ராகமுன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது அலுவலகத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் நிரு பிக்கக் கூடிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் கேள்விப் பத்திரங்தைக் கோர வேண்டும்.

4. வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக்கட்டணமாக மேலே காட்டிய தொகையை ஏதாவதொரு கச்சேரியிற் செலுத்திப் பற்சுச்சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

5. இக் கேள்விக்காய மேலதிக விபரங்களை எனது அலவலகத்தில் அலவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. யோகநாதன்,
நீர்ப்பாசனப் போறியியலாளர்,
புத்தளம் றீப பிரிவு.

10–700.—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

---

**தபால் தந்திப் பகுதி**
**இறப்பர் முத்திரைகள் வழங்கல்**

இறப்பர் முத்திரைகள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு
1. தபால் தந்தித் தலைமைக் கட்டிடக் காரியாலயத்திலுள்ள பெரும் பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆந் திகதி மு. ப. 10.00 மணி வரை எற்றுக் கொள்ளப்படும்.

2. 1969, நவம்பர், ச் ந் திகதி மு. ப. 10.15 மணிக்கு கேள்வி பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள், கேள் விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு 5, நாரஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டிடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலிருந்து பெற்ற பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

4. கொழும்பு 1, பிரதம தபாற் கந்தோரிலுள்ள 4 ஆம் இலக்கக் கருமபீடத்தில் கேள்விப்பத்திரப் பொறுப்புப்பணமாக ரூபா 50– கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் களுக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி பி. ப. 4.30 மணி வரை வழங்கப்படும்.

5. மேலதிக விபரங்கள், கொழும்பு 5, நாரஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டிடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

த. த. தலைமைக் கந்தோர்க் கட்டிடம்,
கொழும்பு 1.

10–573—8–10–69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

கேள்விப் பத்திர அறிவித்தல்

வாழைச்சேனையிலுள்ள, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு 600 நீள் தொன் அலுமினியம் சல்பேற் வழங்குவதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வது 20.12.69 பி. ப. 2.00 மணிக்கு முடிவடையும்.

கேள்விப் பத்திரப் படிவங்களும், மற்றும் ஏனைய விபரங்களும் பொறுப்பு முதல்வர்கள், அல்லது வழங்குபவர்களின் பெயர்களும் விலாசங்களும் அடங்கிய விண்ணப்பமூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,

356, யூனியன் இடம், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.
1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மீ 24 ஆந் வ.

10–586—17–10–69 ஆந் திகதிய வர்த்தமானி இல.

---

கொழும்புத் துறைமுக அதிகாரசபை

காலித்துறைமுக றாமஸ்ஸலவேலைத்தன உணவுச்சாலை

மேற்படி தேநீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப் பட்ட கேள்விகள் 1969 ஆம் ஆண்டு ஒத்தோபர் 30 ஆம் திகதி பகல் 2.30 மணிவரை துறைமுக அத்தாரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். இக்குத்த கை,, துறைமுக அத்தாஜியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்காகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையில் ரூபா 25.00 கட்டுப் பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்து செய்யப்பட்டு இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள்,1969 ம் ஆண்டு ஒக்தோபர் 28 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாத் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைத்தான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்து துக்கொடுக்கப்படும்.

10–686—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல.——.

---

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

பின்வரும் பட்டியலின்படி 1969 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் திகதி முதல் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிவரையான காலத்தில் பாலுடன் தேனீரும், சிற்றுண்டியும் வழங்குவதற்கும், பங்கீடுவதற்கு மான கேள்விப் பத்திரங்கள் இத்தால் கோரப் படுகின்றன.

(அ) துறைமுகத்துக்குள் சுமார் 6 மைல் தூரமுள்ள இராணி எலிச பெத் மேடையிலிருந்து விஜயகுமாரன் மேடைவரையான எட்டு தானங்களில் சுமார் 35 வேலையாட்களுக்கு மாலை 5 மணிக்கு.

(ஆ) துறைமுகத்திலிருந்து சுமார் 6 மைல் தூரம்வரை "மக்கலம் லொக்குலும்" கொலன்னுவையிலும் சுமார் 14 வேலையாட் களுக்கு மாலை 5 மணிக்கு.

(இ) துறைமுகத்துள் சுமார் 10 மைல் தூரம்வரையான 50 தானங் களில் சுமார் 200 வேலையாட்களுக்கு நள்ளிரவு 12 மணிக்கு.

(ஈ) சுமார் 10 மேல் தூரம்பிடிக்கும் புளூமென்டால், முகத்துவாரம், பாலத்துறையிலுள்ள நாகலம்வீதி, உறுகொடவத்தை, கொல ன்னவை, மீதோட்டமூல்லை ஆகிய இடங்களில் சுமார் 34 வேலை யாட்களுக்கு நல்லிரவு 12 மணிக்கு.

(உ) மக்கலம் வீதி வழியாக சுமார் 3 மைல் விஸ் ரணமுள்ள வின்சன் றீவீதி, அர்ச். செபந்தியான் லொக்ஸ், மருதானை ஆகிய இடங்களில் சுமார் 15 வேலையாட்களுக்கு நள்ளிரவு 12 மணிக்கு

2. ஒரு கோப்பைப் பால்தேனீருக்கும், சிற்றுண்டிக்கும் அங்கீகரிக்கப் பட்ட விலை சதம் 40 ஆகும்.

3. கேள்வியாளர்கள் நாள்தோறும் தாம் கொடுக்க விரும்பும் சிற்றுண்டிகளின் வகைகளை அட்டவணைப்படுத்தித் தெரிவித்தல் வேண் டும்.

குறிப்பு: பங்கீட்டு இடங்களும், சிற்றுண்டிகளின் தொகையும், காலத் திற்குக் காலம் மாற்றமடையும். வழங்கப்பட்ட சிற்றுண்டிகளின் மொத்த எண்ணிக்கைப்படியே பணம் கொடுக்கப்படும்.

4. கேள்வியாளர்கள் பங்கீட்டு இடங்களைப் பார்வையிட விரும்பினால், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் நிர்வாகச் செயலாளர் அலு வலகத்திற்கு வரவேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் 1969 நவம்பர் 3 ஆம் திகதி நண்பகல் 3 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு மூடப்படும்.

6. "தேனீர் ஆகியவற்றை வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்" என்று குறிக்கப்பட்ட உறையில் கேள்விப் பத்திரங்களை இட்டு, மெழுகினால் அடையாளமிட்ட பின்னர் கப்பற்றுறை ஆணையாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்திலுள்ள கண்காணிக்கும் குடித்துறைப் பொறி ஞரின் அலுவலகத்தில் இருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் அவை களைப் போடுதல் வேண்டும்.

வி. சி. பர்ணுந்து,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.
சிவ-

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் மீ 7 ஆந் வ.

643—9–10–69 ஆம் திகதிய வர்த்தமனி இல.

---

கச்சேரி—மாத்தறை

பழுது பார்க்கப்படாத நில மோட்டார் வாகனம் விற்பனை
சிறீ 7150

மாத்தறைக் கச்சேரி ரெண்டர் சபைத் தலைவரால், 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 6 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரைக்கும், சீல் செய்யப்பட்டுள்ள ரெண்டர் பத்திரங்கள், கச்சேரி வளவுக்குள் மேற் குறிக்கப்பட்ட வாகனம் விற்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படும். ரெண்டர் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாளே இது திறகசப்படும். ரெண்டர் பத்திரங்கள் அனுப்பிய யாவரும், ரெண்டர் திறக்கும்பொழுது பிரசன்னமாக இருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

2. ரெண்டர் பத்திரம் விநியோகிப்பதற்கு முன்பு திருப்பிகொடுக் கப்படும் ரூபா 100 – மாத்தறைக் கச்சேரியில் கட்டப்படவேண்டும். 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 5 ஆம் திகதி பகள் 12 மணி வரைக்கும் ரெண்டர் பத்திரங்கள் விநியோகம் செய்யப்படும். ரெண்டர் பத்திரங்கள் பதிவு செய்த தபால் மூலம் தலைவர், ரெண்டர் சபை, கச்சேரி, மாத்தறை விலாசத்துக்கோ, அல்லது நேர்முகமாக்கொடுப்பின, கச்சேரியிலுள்ள காரியாலய பரிபாலனருக்குக் கொடுக்கவும். ரெண்டர் அனுப்பப்படும் உறையின் இடது மேற் பகுதத்தில் "ரெண்டர் 4 சிறீ—7150" என்று எழுத வேண்டும்.

3. மாத்தறை அதிபருடைய அனுமதியுடன் வேலை நாட்களில் கந்தோர் நேரத்தில் கச்சேரி வளவுக்குள் வாகனம் பார்க்கலாம்.

4. சித்தியடைந்த ரெண்டர் செய்யப்பட்டவர் கேட்கப்பட்டுள்ள முழுப் பணத்தையும் கொடுத்து ரெண்டர் ஏற்கப்பட்ட ஒரு கிழமைக்குள் வாகனத்தை ஏற்க வேண்டும்.

5. எதுவித காரணமுமில்லாமல் ஏதாவது ஒரு ரெண்டரையோ அல்லது எல்லா ரெண்டர்களையுமோ ரத்துசெய்வதற்கு மாத்தறைக் கச்சேரியிலுள்ள ரெண்டர் சபை தலைவருக்கு அதிகாரமுண்டு.

6. வேறு விபரங்கள் மாத்தறைக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யு. கசமங்க,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.

கச்சேரி, மாத்தறை,
1969 ஆம் ஆண்டு ஒக்தோபர் மீ 10 ஆந் வ.

10–539

## கமத்தொழிற்றிணைக்களம்

### கிளிநொச்சி அரசாங்கப் பண்ணைக்கு 12 கியூப் மண்டக்கல் (றபிள்) ஒரு கியூப் ½ அங்குல கல் (மெற்றல்) விநியோகித்தல் பாரங்கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம் கமத்தொழில் காரியாலயத்தில் கமத்தொழில் அதிகாரி (பண்ணை முகாமையும் ஆக்கமும்) யினால், கிளிநொச்சி அரசாங்கப் பண்ணைக்கு 12 கியூப் மண்டக் கல் (றபிள்), ஒரு கியூப் ½ அங்குல கல் (மெற்றல்) கீழ்க் குறிப்பிடப்படும் நியமத்தின்படி விநியோகித்தல் பாரங்கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 6.11.1969 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) அத்திவாரத்திற்கு உபயோகிப்பதற்காக 6 அங்குல விட்டத்திற்குக் குறையாத மண்டக்கல (றபிள்) 12 கியூப்.

(2) ½ அங்குல கல் (உடைத்த) (மெற்றல்) ஒரு கியூப்.

கேள்விக்காரினால் 1969 ஆம் ஆண்டு நொவெம்பர் முதற் கிழமையுள் விநியோகித்தல் பாரங்கொடுத்தல் முடிவடைதல் வேண்டும். ஒரு கியூப் பிற்கு அறவிடும் தொகை குறிப்பிடப்பட வேண்டும். இக்கல்லு கிளி நொச்சி அரசாங்கப்பண்ணைக்குக் கொண்டு வந்து பாரம் கொடுத்தல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவை களுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும் ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திர மும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் நீறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர் ,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப் பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேளவிப் பத்திரங்களடங்கிய தபாலுறையின இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு ”.

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்). ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் ” என்று குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகத்திலோ அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையிலோ செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக கொடுக்கப் படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தன்து கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர் கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவித்க் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப் பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி யாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக் காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பிப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப் படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யா மலோ, குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ, அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப் படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேளவிப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரி யின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கை யரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

“இலங்கையர்” என்னும் பதம் இலங்கையின் வம்சாவளியினரை, அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ஆம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்குக் கொந்தராத்துக்காரரே பொறுப்புடைய வராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அர சாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ, அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும், விவரங்கள் தேவைப்படின், ஒவ்வொரு பண்ணைக்கு முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும்ப.)

பேராதனை

19-596—17.10.69 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,877.

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.**

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் கூறப்பட்டிருக்கும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குச் சொந்தமான இடங்களின் விற்பனவு சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளரை (சேர்த்தல், உத்தியோகமற்ற) 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்குப் பிந்தாமல் வந்து சேருமாறு புதிய செயலகம், செனட் சதுக்கம், கொழும்பு 1. என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. குறிக்கப்பட்டிருக்கும் இடங்கள் என்ன விலைக்கு வாங்கப்படும் என்பதை கேள்விப்பத்திரத்தில் எவ்வித்த்திலும் அறிவிக்கலாம்.

3. 1969 ஒக்ரோபர் 31 ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு குறிக்கப்பட்ட உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் கேள்விக்கத்திரங்கள் திறக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் அனுப்புபவர்கள் அவை திறக்கப்படும் பொழுது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

5. கூறப்பட்ட உதவி ஆணையாளரால் கேள்விப் பத்திரத்தில் வெற்றி பெறுபவராக ஏற்கப்படுவர் உடன், ஏற்கப்பட்ட கேள்விப்பத்தில் அனுமதிக்கப்பட்ட தொகையின் பத்தில் ஒரு பங்கை வைப்புப்பணமாகக் கொடுப்பதுடன் மீதியை 1969 நவம்பர் 15 ஆம் திகதி 2.30 மணிக்கு முன் கொடுக்க வேண்டும்.

6. 1969 நவெம்பர் 15 ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்குக் குறிக்கப்பட்ட மிகுதிப் பெறுமதி செலுத்தப்படவில்லையாயின், 1969 ஒக்ரோபர் 31 ஆம் திகதி செலுத்தப்பட்ட வைப்புப் பணம் இறையாக எடுத்துக் கொள்ளப்படும்.

7. கேள்விப்பத்திரத்தை ஏற்கும், அல்லது நிராகரிக்கும் பொறுப்பை உதவி ஆணையாளர் தனக்குத்தான் மட்டும் காத்திக் கொள்ளுவார்.

8. குறிக்கப்பட்ட கொள்வனவு பூர்த்தியாக்கப்படும் பட்சத்தில், முழுக் கொள்வனவுப் பணம் செலுத்தப்பட்டபின், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் குறிக்கப்பட்ட கொள்வனவு செய்பவருக்கு அவற்றை அறிவிப்பார்.

9. அவ்விடத்தில் வாடகை செலுத்தி ஒருவர் முடியிருப்பாராயின் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் கொள்வனவு செய்பவருக்கு காணியை குடிவசிப்பவரினறிக் கொடுக்கமுடியும் என்னும் உத்தரவாதம் அளிக்க முடியாது.

10. தபாலில் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் இடது கோடியில் "கேள்விப்பத்திரம்" என்னும் குறிப்புடன் உதவி ஆணையாளர் உள்நாட்டு இறைவரி (சேர்த்தல் உத்தியோகமற்ற), புதிய செயலகம், செனட் சதுக்கம், கொழும்பு 1. என விலாசமிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

(ஒப்பம்) ஈ. என். ஜி. திலகரத்தின,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்,
(சேர்த்தல் உத்தியோகமற்ற)

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
3 வது மாடி, புதிய செயலகம்,
செனட் சதுக்கம், கொழும்பு 1.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

உத்தரவாதமளிக்கப்பட்ட நில அளவையாளரும் மட்டப்படுத்துபவருமான, திரு. எச். டொன். டேவிட் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1939 ஆம் காணிப் படத்தின், 34 ஆம் பிரிவாக அடையாளமிடப்பட்ட முழுக்காணியும், அதனுள் அடங்கிய கட்டிடங்களும், பயிர்களும், மேல்மாகாணம், கொழும்பு மாவட்டத்திற்கும், மாநகரசபை எல்லைக்குழுமுட்பட்ட பிரிவிலடங்கிய கொட்டாஞ்சேனை, ஸ்கரீன் வீதியிலுள்ள 49 ஆம் இலக்க வவவு—

வடக்கே— மேற் கூறப்பட்ட 2890 ஆம் இலக்கப்படத்தின் 35 ஆம் காணித்திண்டை எல்லையாகவும்,

கிழக்கே— 40 வடி அகலமுடைய தெரு ஒதுக்கிடோன 51 ஆம் இலக்கம் குறிக்கப்பட்ட துமான காணித்துண்டை எல்லையாகவும்,

தெற்கே— மேற்கூறப்பட்ட படத்தின் 35 ம் காணித்துண்டை எல்லையாகவும்,

மேற்கே— வடக்கு ஸ்கினர் வீதியை சென்றடையும் 40 அடி அகலமுடைய தெருவுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் செல்வதான 30 அடி அகலமுடைய தெருவுக்கு ஒதுக்கப்பட்டதும் மேற்கூறப்பட்ட படத்தின் 49 ஆம் இலக்கமிடப்பட்ட காணித் துண்டை எல்லையாகவும் மேற்கூறப்பட்ட படத்தின்படி அதன் நிலப்பரப்பு 12.73 சேர்ச்சுகள் ஆகும்.

40 அடி அகலமுடைய தெரு ஒதுக்கீடான, 51 ஆம் இலக்கம் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுக்கூடாகவும் வடக்கு ஸ்கினர் வீதியைச் சென்றடையும் 40 அடி அகலமுடைய தெருவுக்கு ஒதுக்கப்பட்டதும் 40ஆம் இலக்கமிடப்பட்டதுமான காணித்துண்டுக்கூடாகவும் செல்வதற்குப் பூரண வழிபாதை–போக்குவரத்து பாவனை உரிமையும் உண்டு.

558

---

**அஞ்சல் தந்தி திணைக்களம்**

**தபாலகை இரணைதீவு பல்லவராயன் கட்டுக்கு இயந்திரப் படகு மூலம் கொண்டு செல்வதற்கான கேள்விப்பத்திரங்கள்**

1969 திசெம்பர் 1 ம் திகதியிலிருந்து தபாலகை இரணை தீவிற்கும் பல்லவராயன் கட்டு உப அஞ்சல் அலுவலகங்களுக்குமிடையில் இயந்திரப்படகு மூலம் இரு வருடங்களுக்கு ஒவ்வொரு பாதைக்கும் கிழமையில் மூன்று நாட்களுக்கு ஒப்பந்த (தபால்) மூலம் கொண்டுசெல்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 12.11.1969 ந் திகதி மு. ப. 10.30 மணிவரை, கொழும்பு, டியூக் வீதி அஞ்சல் தந்தி திணைக்களத்திலுள்ள அஞ்சல் தந்தி திணைக்களங்கள் கேள்விப்பத்திர சபைத்தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள், அஞ்சல் அதிபர் நாயகத்திடம் விண்ணப்பத்தின் பேரில் பெற்றுக் கொண்ட பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும். அஞ்சல் அதிபர் நாயகத்திடமிருந்து இவ்விடயம் சம்பந்தமாக எல்லா விபரங்களும் அறிந்து கொள்ளலாம். அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது கச்சேரியிலோ கேள்விப்பத்திர பொறுப்புப்பணமாக ரூபா 10–கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரம் 10–1969 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

வி. எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்,
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

அஞ்சல் தந்தி தலைமை அலுவலகம்,
கட்டிடம்,
டியூக் வீதி,
கொழும்பு.

0–545—17–10–69 ந் திகதிய வர்த்தமானி இல.

---

# பொருள்கள் விற்பனையும் பிறவும்

பாவித்த பொருள் ஏலவிற்பனை

கீழே கொடுக்கப்பட்ட பாவித்த பொருள்களும் மற்றும் பாவித்த உடைகளும் கேகாலை உதவி பொலிஸ் அதிகாரியாலய வளவில் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ந் உ காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

பணம் உடன் செலுத்தி ரசீதுப் பெற்றுக்கொள்ளவும். எடுத்த பொருட்கள் அத்தனையும் ஏல விற்பனை முடிந்தவுடன் வளவில் இருந்து அகற்றப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | துவிசக்கரவண்டி பாவித்தது (பைசிக்கிள்) | 15 |
| 2. | இஸ்திரிக் பெட்டி | 1 |
| 3. | 2. பில்டர் (வடி) | 1 |
| 4. | லாம்பு | 1 |
| 5. | பெற்றோல் மைக்ஸ் (லாம்பு) | 1 |
| 6. | மேசை லாவபு | 1 |
| 7. | ரேப் பெட்டி | 1 |
| 8. | மெத்தை | 41 |
| 9. | தோல் சப்பாத்து ஜோடு | 445 |
| 10. | மழைக்கோர்ட் கறுப்பு | 10 |
| 11. | கட்டைக் களுசான் காக்கி ஜோடு | 42 |
| 12. | புஸ் கோர்ட் காக்கி | 20 |
| 13. | கோர்ட் காக்கி | 36 |
| 14. | தொப்பி | 250 |
| 15. | பூட்ஸ் சப்பாத்து ஜோடு | 95 |
| 16. | கம்பிளி (காப்பெட்) | 40 |
| 17. | தோல் பட்டி (பெல்ட்) | 42 |
| 18. | றப்பர் மழைக்கோர்ட்டு | 12 |
| 19. | நாலு கலன் ரின் | 40 |
| 20. | ஒரு கலன் ரின் | 151 |

கேகாலை உதவி பொலிஸ் அதிகாரி.

கேகாலை,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 21 ந் உ.

10–602

கொழும்புக் கச்சேரி—துப்பாக்கிகளின் விற்பனை

ஒப்படைக்கப்பட்டுள்ள துப்பாக்கிகள், றைபிள்கள் ஆகியனவற்றின் ஏல விற்பனை 1969 ம் ஆண்டு அக்டோபர் 30 ந் திகதி மு. ப. 10 மணிக்குக் கொழும்புக் கச்சேரியில் நடைபெறும்.

2. துப்பாக்கிகளை எடுத்துக்கொள்ள அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்போர்க்கு மாத்திரம் ஏலவிற்பனையில் விலைகோர அனுமதியளிக்கப்படும்.

3. ஏலவிற்பனை செய்யப்படவிருக்கும் துப்பாக்கிகள் 1969 ம் ஆண்டு அக்டோபர் 29 ந் திகதி பி. ப. மணிக்கும் 4 மணிக்குமிடையில், இவ் அலுவலகத்தில் பார்வைக்குக் கிடைக்கப்பெறும்.

4. அனுமதிப் பத்திரம் உடையவர்களுக்கு அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அவர்களின் பிரதிநிதிகளுக்கு மாத்திரம் ஏலவிற்பனை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

டி. ஆர். உமகிலிய,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கச்சேரி,
கொழும்பு, 1969 ம் ஆண்டு அக்டோபர் மீ 6 ந் உ.

10–692—17.10.69 ந் திகதிய வர்த்தமானி இல.——.

---

மீண்ட கடித அலுவலகத்தில் உரிமை கோரப்படாத அஞ்சற் கட்டுக்களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், கொழும்பு 3. கொள்ளுப்பிட்டி, 19 ம் ஒழுங்கை 20 ம் இலக்கத்திலுள்ள மீண்ட கடித அலுவலகத்தில், 1969 ஒற்றோபர் 27 ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 1.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனவு செய்யப்படும்.

நியாயமான விலை கோரப்படாத ஒந்த விடயமும் விற்பனையிலிருந்து நிறுத்திவைக்கப்படும்.

பி. டி. எம். வியனகோ,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப்
போக்குவரத்து அதிபருக்குமாக.

நிர்வாகப்பிரிவு, —
அ. த. தலைமை அலுவலகக்கட்டிடம்,
கொழும்பு 1.
6 ஒற்றோபர் 1969.

1 .. ஒரு அந்தர் பழைய புதினத்தாள்கள்.
2 .. ஒரு அந்தர் பழைய் புதினத்தாள்கள்.
3 .. 40 முத்தல் பாவனையற்ற தாள்களைக் கொண்ட 35 பைகள்.
4 .. ஒரு கட்டு ஆங்கில சஞ்சிகைகள்.
5 டி
6 .. டி
7 .. டி
8 டி
9 டி
10 .. டி
11 டி
12 .. ஒரு கட்டுதமிழ் சஞ்சிகைகள்
13 .. ஒரு கட்டு சமய சஞ்சிகைகள்.
14 ஒரு கட்டு வைத்திய வெளியீடுகள்.
15 ஒரு கட்டு ஆங்கில புத்தகங்கள்.
16 .. 20,000 பாவனை செய்த உள்ளூர் வெளிநாட்டு முத்திரைகள்.
17 ஒரு கூட்டு சமயப்படங்கள்.
18 ஒரு மூட்டு சமயப்படங்கள்.
19 .. 3 இந்திய நூல் புடவைகள்.
20 3 இந்திய நூல் புடவைகள்.
21 3 இந்திய நூல் புடவைகள்.
22 .. 3 இந்திய நூல்இபுடவைகள்.
23 .. வர்ணத் நூள் பக்கெட்டுகள், 2 பெட்டி சுருட்டுகள்.
24 .. 2 பக்கெட் வில்கின்சன் பிளேட், ஈரு சிவப்பு சால்வை, 2 2 மூக்குக் கண்ணுட்டிகள், 1 பேனை, ஒரு பக்கெட் ஊசிகள் பிறேஸ்லெற் ஒரு பாவனை செய்த முத்திரை அட்டை
25 ஒரு நெருப்பணைக்கும் கருவி.

10–619

---

# ஆயவிற்பனையும் குத்தகைவிற்பனையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1969 70 ம் ஆண்டுக்குரிய துறைவரி மறு விற்பனை

1969 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதிவரையுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள துறைகளில் ஆய வரிகள் பெறுவதற்கும் சகல போக உரிமைகளையும் வழங்குவதற்குமான கேள்விப்பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகளுக்குட்பட இத்தால் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா நூறு (100–) பிணையாகக் கட்டப்படும் அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். அவ்வாறான பற்றுச்சீட்டு காட்டுமிடத்து மட்டக்களப்பு கச்சேரியில் 1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 ந் திகதிக்குமுன் வழங்கப்படும் மாதிரிப்பத்திரங்களின் மேலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ..........(இங்கே துறையின் பெயர் எழுதவும்) துறைவிற்பனவு" என்று இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு, முத்திரை (சீல்) இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் கிடைப்பதற்கான கடைசி நே முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ந் திகதி கீழே குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமூகம் கொடுக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள்திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்தருத்தை திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரினாலோ பிரிவு காரியாதிகாரியாலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம்கங்கள் தமது ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக்கூட்டுறவுச்சங்தமது சங்கம் பகுதிக்குரிய உதவிக்கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து

துறையை நடத்தி ஆயவரி அறவிடத்தகுதியுள்ளதென்றும் கேள்விப் பணத்தில் மூன்றில் ஒருபங்கை பிணைப்பணமாகக் கட்டக்கூடிய நிதி வசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப்பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அவ்விடத்தில் விற்பனை நிபந்தனைகளுக்கிணங்கக் கையொப்பமிட்டு வாங்கிய பெறுமதியில் மூன்றில் ஒருபங்கை பணமாக அரசாங்க அதிபருக்குப் பிணை கட்டவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ பிணைகட்டுவதற்கோ, பிணைஉறுதிக்கு தொகையைக் கட்டுவதற்கு தவறுமிடத்து. அவரினால் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங்கத்தின்கீழ் எவ்வித கொந்தருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். இவ்விதி விலக்கைத்தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்தருத்துக்காரரினால் அல்லது கொந்தருத்துக்காரர்களினால் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டுப் பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றவையோரின் கேள்விப் பத்திரப்பணம் மீட்டுக்கொளப்படும்.

எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

தற்போது பாதைகள் வேலைசெய்யும் துறைகளுக்குப் பாதைகள் கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப்படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம் முடைய சொந்த வள்ளங்களையே உபயோகிக்கவேண்டும்.

துறைவரி விதிகளின்படி தபால் கொண்டுசெல்லும் சேவகர்களும் அரசாங்க வாகனங்களும் துறைக்கூலி செலுத்தவேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபாட்சேவகரிடமிருந்தும் அரசாங்க வாகனங்களிடமிருந்தும் துறைக்கூலி ஏற்கக்கூடாது.

மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

எட்கார் பெர்னண்டோ,
மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

கச்சேரி,
மட்டக்களப்பு,
1969 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 4 ந் உ.

| துறையின் விபரம் | காரியாதிகாரியின் பிரிவு | கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் நேரம் முற்பகல் |
|---|---|---|
| வலையிறவு .. | மண்முனைப்பற்று வடக்கு .. | 10.00 |

10–565—17–10–60 ந் திகதிய வர்த்தமானி இல.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1969

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | .. | 5.9.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| ஒற்றோபர் | .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| நவெம்பர் | .. | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| திசெம்பர் | .. | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி. ப. | 3.30 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1969 ம் ஆடு யூன் மீ 13 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.